
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 07 வியாழக்கிழமை (23.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309


# காங்கேசன்துறை கடலில் நின்ற கப்பல்கள் மீது புலிகள் தாக்குதல்

## முறியடிப்பு என்கிறது கடற்படை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றி வந்து காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதற்காக நின்றிருந்த இரண்டு கப்பல்கள் மீது நேற்று அதிகாலை 5 மணியளவில் விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்த வந்தபோது அவர்களுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்தார். ஆனால் காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கப்பல்களில் ஒன்றைத் தாக்கி மூழ்கடித்துள்ளதாகவும் மற்றொன்றைச் சேதப்படுத்தியுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

தாக்குதலுக்கு இலக்கான நிமலவ கப்பல்



# யாழ்ப்பாணத்தில் இன்று ஹர்த்தால்

## ஈ.பி.டி.பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று ஹர்த்தால் மேற்கொள்ள ஈ.பி.டி.பி. அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் நேற்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்கள் உட்பட அனைத்து அத்தியாவசிய பொருள்களும் கப்பல் மூலமாகவே அனுப்பப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தடுப்பாடு நிலவுவதாகவும் விலை உயர்வு இருப்பதாகவும் வெறும் வாய்ப்பிரச்சாரம் செய்தவர்கள் மக்களின் அவலங்களை எப்போதும் வேடிக்கை பார்த்ததே வரலாறாக இருக்கின்றது.

ஈ.பி.டி.பியாகிய நாம் வேடிக்கை பார்க்காமல் மக்களின் துயரங்களைப் போக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளை அயராது எடுத்ததன் பயனாகப் பொருள்கள் தட்டுப்பாட்டையும் அதீத விலையுயர்வையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோம்.

உணவுப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள், அத்தியாவசிய பொருள்கள் என்பவற்றைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ஏமாற்றி விட்டார் வை.கோ. கூறுகின்றார்

(சென்னை)

இலங்கைக்கு இராணுவ உதவி செய்ய மாட்டேன் என்று பிரதமர் எனக்கு அளித்த வாக்குறுதியை நம்பினேன். ஆனால் அவர் ஏமாற்றி விட்டார் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கூறினார்.

சென்னையில் கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் கூறுகையில், புலிகளின் ஆயுதக் கப்பல்களை இந்திய இராணுவம் தகர்த்தது. கடற்புலிகளை அழிக்க இந்திய இராணுவம் தகவல் குறித்து உதவியது.

4ஆண்டுகளாகப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீழ்ந்து வெடித்ததில் மல்லாகத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மல்லாகம் நீலியம்பளைப் பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கணவன் மற்றும் மனைவி இருவரும் இவ் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

இதில் காயமடைந்த எம்.உதயகுமார் (வயது-42) மற்றும் அவரது மனைவி வசந்தநாயகி (வயது-36) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை காங்கேசன்துறை துறைமுகத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 'பார் சிறுத்தலால் படை பெருத்ததோ படை பெருத்தலால் பார் சிறுத்ததோ'

### கலைஞர் கருணாநிதி அறிக்கை

(சென்னை)

சென்னையில் நாளை வெள்ளிக்கிழமை ஈழத் தமிழர்களுக்காக நடத்தப்படும் மனிதச் சங்கிலி அணி வகுப்பில் 'பார் சிறுத்தலால் படை பெருத்ததோ-படை பெருத்தலால் பார் சிறுத்ததோ' என்ற அளவில் தமிழர்கள் அணி திரள வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சென்னையில் நேற்றுப் புதன்கிழமை கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் மேலும் (02 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே தேவை

## இந்தியா அவசர அழைப்பு

(புதுடில்லி)

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தமிழ்மக்கள்உட்பட அனைத்து சிறுபான்மை மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை மதித்து அதை உள்ளடக்கி எட்டப்படும் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதே தற்போதைய தேவை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையிலுள்ள நிலைவரங்கள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையின் வட பகுதியில் சீர்குலைந்து வரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பசில் ராஜபக்ஷ இந்தியா விஜயம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர்.

வன்னி நிலைவரம் தொடர்பாக குறித்த உயர் மட்டக் குழுவினர் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் விஜயம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த (12 ஆம் பக்கம் பார்க்க)





சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் பெற்றோர் தின விழாவில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரி அதிபர் என்.வன்னியசிங்கம் மற்றும் அவரது பாரியார் யோகேஸ்வரி வன்னியசிங்கம் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# 'ஏ' நெகட்டிவ் இரத்தம் அவசரமாகத் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஏ நெகட்டிவ் வகை இரத்தம் மிகவும் அவசரமாக தேவைப்படுகின்றது.

எனவே ஏ நெகட்டிவ் குருதி வகையைச் சேர்ந்தவர்கள் மிகவும் அவசரமாக இரத்ததானம் செய்து உதவுமாறு யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்தவங்கியின் வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் கேட்டுள்ளார். (சி)

# கல்விமாணி விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவன கல்விமாணிப் பட்டநெறி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் கல்விமாணி பாடங்களுக்கான ஒப்படைகள் வழங்கப்படவுள்ளதுடன் முதலாம் வருட மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் தேசியகல்வி நிறுவனத்தின் இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (சி)

# கப்பம் கோரிய நபருக்கு 2 வருட சிறைத் தண்டனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரிமூலையில் உள்ள வீடொன்றினுள் மாலை வேளையில் அத்துமீறி நுழைந்து கொலை அச்சுறுத்தல் விடுத்து 5 இலட்சம் ரூபா கப்பம் கோரியதுடன் அவ்வீட்டிலிருந்த பெண்ணை பயமுறுத்தி தங்கநகைகள் மற்றும் ரொக்கப்பணம் அடங்கலாக 95 ஆயிரம் ரூபாயை அபகரித்துச் சென்ற ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் இரண்டு வருட சிறைத்தண்டனையும், மூவாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்பளித்தது.

அபராதக் கட்டணம் செலுத்தத் தவறினால் மேலும் ஒருவருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலியை சேர்ந்த ஒருவருக்கே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் கடந்த 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து குற்றவாளிக்கு இரண்டு வருட சிறைத்தண்டனையும் மூவாயிரம் ரூபாய் அபாரதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-52)

# வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

'நாம் பயிரிடுவோம்;தேசத்தை உருவாக்குவோம் உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின்' வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்ட நிகழ்வு யுாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க ஏற்பாட்டில் ZOA நிறுவனம், கமநலசேவைகள் திணைக்கள அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது முதற்கட்டமாக 250 பயனாளிக் குடும்பங்களுக்கு மரக்கறி நாற்றுப்பைகள் வழங்கப்படவுள்ளது. (சி)

# கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு மழைவீழ்ச்சி குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பமாகியுள்ளது. இதன் அடிப்படையில் குடாநாட்டில் இதுவரை 214.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக காலநிலை அவதான நிலையத்தின் திருநெல்வேலி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப் பகுதியிலேயே குறித்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைவடைந்திருப்பதாகவும் காலநிலை அவதான நிலையத்தின் திருநெல்வேலி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஓ)

# மின்கட்டணத்தைக் குறைக்க மின்சார சபை இணக்கம்

## முதலாம் திகதி அமுலுக்கு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை நேற்று இணக்கம் தெரிவித்தது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைய இலங்கை மின்சார சபையினால் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நுகர்வோரிடம் அறவிடப்பட்ட கட்டணங்களை விட குறைந்த கட்டண முறைமை ஒன்றுக்கான யோசனை இலங்கை மின்சார சபையினால் உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நுகேகொட நாலந்த ராம விகாராதிபதி தேனியாவில பாலித தேரர் மற்றும் கோட்டோ நாக விகாராதிபதி மாதுரவாவி சோபித தேரர் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இதற்கமைய முதல் முப்பது மின் அலகுகளுக்கு தலா மூன்று ரூபாய் வீதமும் நிலையான கட்டணமாக அறுபது ரூபாயும் 31-வது மின் அலகிலிருந்து 60-வது மின் அலகு வரை தலா 4 ரூபாய் 70 சதம் வீதமும் நிலையான கட்டணமாக 90 ரூபாயும் வீட்டு மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது.

61-வது மின் அலகுமுதல் 90-வது மின் அலகுவரை தலா 7 ரூபாய் 50 சதம் வீதமும் நிலையான கட்டணமாக 120 ரூபாயும் வீட்டு மின்பாவனையாளர்களிடம் அறிவிடப்படவுள்ளது.

அதேபோன்று 91-வது மின் அலகுமுதல் 180-வது மின் அலகுவரை தலா 16 ரூபாய் வீதமும் நிலையான கட்டணமாக 180 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

181-வது அலகுமுதல் 600-வது மின் அலகுவரை தலா 25 ரூபாய் வரையும் நிலையான கட்டணமாக 240 ரூபாயும் 600-வது அலகுக்குமேல் ஒவ்வொரு அலகுக்கும் தலா 30 ரூபாய் வீதமும் நிலையான கட்டணமாக 240 ரூபாயும் வீட்டு மின் பாவனையாளர்களிடம் அறவிடுவதற்கு இல்ங்கை மின்சார சபை சமர்ப்பித்த யோசனைக்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இது இவ்வாறிருக்க மத வழிபாட்டுத் தலங்களுக்கிடையிலான கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முதல் 30 மின் அலகுகளுக்கு தலா 2 ரூபாய் 50 சதம் வீதமும் நிலையான கட்டணமாக 60 ரூபாயும் 31-வது அலகிலிருந்து 90-வது மின் அலகு வரை தலா 3 ரூபாய் 70 சதம் வீதமும் நிலையான கட்டணமாக 90 ரூபாயும் மதவழிபாட்டுத் தலங்களுக்கு அறவிடப்படவுள்ளது.

91-வது மின் அலகு முதல் 120-வது மின் அலகுவரை தலா 9 ரூபாய் வீதமும் நிலையான மின் கட்டணமாக 120 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

அதேபோன்று 121-வது மின் அலகு முதல் 180-வது மின் அலகுவரை தலா 10 ரூபாய் வீதமும் நிலையான கட்டணமாக 180 ரூபாயும் அறவிடப்படவுள்ளது. (ச-3)

# பேராசிரியர் மகேஸ்வரன் நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப்பேருரை இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இரசாயனப் புற்றுநோய் உருவாக்கமும் யாழ்.குடாநாட்டில் அதன் சாத்தியமான தாக்கங்களும் (CHEMICAL CARCINOGENESIS & ITS POSSIBLE IMPACT IN JAFFNA PENINSULA) என்னும் தலைப்பில் யாழ்.வைத்தியசாலை புற்றுநோய் நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்துறை அழைத்துள்ளது. (ஓ)

# 'பார் சிறுத்தலால் படை பெருத்ததோ...'

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தமிழர்களுக்காக ஒரு துளி கண்ணீர் வடிக்கவும் மெல்ல உதடசைத்து ஆறுதல் கூறவும் வழியற்றுப்போய் விழியற்ற குருடர் களாய் இங்குள்ள தமிழினம் தவித்துக் கொண்டிருக்கின்றது.

70 ஆண்டு காலமாக இலங்கை வாழ் ஈழத் தமிழர்கள் உரிமையற்றவர்களாக, உடைமைகளைப் பறிகொடுப்பவர்களாக, ஏன் உயிரையும் கூட அர்ப்பணிப்பவர்களாக இன்னும் சொல்லப் போனால் கற்பெனும்மான உணர்வையும் கொள்ளை கொடுப்பவர்களாகக் கணவன் முன்னிலையில் அவன் கட்டிய மனைவி - கற்பிழந்தால், அண்ணனோ தம்பியோ கண்ணெதிரே பார்த்துக் கொண்டு அலற, அலற அவர்களின் அருமைச் சகோதரி அக்காளோ, தங்கையோ, அம்மாவோ, அதினிலும் கொடுமையாக முதிர்ந்து வயது தாய்க்குலமும் முள்ளம்பன்றிகளின் முரட்டுப் பற்களுக்கிடையே சிக்கி இரத்தம் சிந்தும் கோரம்! கோரம்!!

தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றதென்றே தெரியாமல் தவழும் தளிர்கள் தாங்கள் நகர்ந் திடும் தாழ்வாரத்திலேயே மரணம் வெடிகுண்டு வடிவத்திலே வெடித்துச் சிதறி அந்தச் சிசுக்களின் உயிரை சூறையாடப் போகின்றது என்பதை நினைத்து அதிர்ந்திடுவதற்கும் நேரம் இன்றி தமது ஆவி பறிகொடுக்கும் அன்னையர்கள்.

இதுதான் இன்றைய இலங்கை- இலங்கையின் நகரங்கள்-கிராமங்கள்-ஏழையர் காலனிகள்-ஏன் செல்வச் சீமான்களின் தோட்டம் துரவுகளில் கூட ஐயோ என்ற ஓலம்-குய்யோ முறையோ என்ற கூச்சல்-இதனை 20 கல் தொலைவுக்கு அப்பால் இங்குள்ள தமிழன் அலைமோதும் கடலோரம் நின்று காதால் கேட்கவும்-கண்ணால் பார்க்கவும் ஒரு பயங்கரமான நிலைமை.

அங்கே போர் நின்றுவிடுவோ? அமைதி திரும்பிவிடுமோ? கள்ளிக்காடு சூழ அவதியுறும் இலங்கைத் தமிழன் ஆறுதல் பெற அங்கே முல்லைப்பூ பூத்துவிடுமோ என்று முட்டிக் கொண்டு அழவும் முடியாமல் மோதிக் கொண்டு கதறவும் முடியாமல் அய்யோ! இலங்கைத் தமிழினம் காப்பாற்றப்பட்டு விடும் போலிருக்கின்றதே என்று தமிழன் என்ற சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்ற பாடலை மறந்து விட்டு அல்லது மாற்றிப்பாட முனைந்து, தமிழன் என்று சொல்லடா தழை இலைகளை மெல்லடா என்றல்லவா பாடிட விரும்புகின்றான் துரோகத் தமிழன்.

அவனுக்கு மாறாக அந்தச் சிறு அடங்காப்பிடாரி கூட்டத்தை தோல் உரித்துக்காட்டுகின்ற முறையிலே அலைமோதும் கடலென ஆர்ப்பரிக்கும் தமிழர் கூட்டம் கடந்த 21 ஆம் நாள் மழை பொழிந்தாலும் கவலையில்லை எங்கள் தமிழரை இலங்கையில் காத்திட இங்குள்ளோர் அணி திரள்வோம் என்று ஆடவர், பெண்டிர், மாணவர், தொழிலாளர் அனைவரும் ஒன்று திரண்டனர்.

இருந்தாலும் மழை காரணமாக இரண்டு நாள் ஒத்திவைத்து மனிதச் சங்கிலி-24 ஆம் நாள் பிற்பகல் என்று அறிவித்ததால் மேலும் 4 மடங்கு மக்களன்றோ தமிழ் முரசொலித்து வர இருக்கின்றார்கள். வரிசை வகுத்திட இருக் கின்றார்கள்.

ஒருவேளை மழை தொடர்ந்து அதில் நனைய நேரிட்டாலும் நினைவெல்லாம் என் தமிழ் இனத்தைக் காப்பதில்தான் நிலைத்திருக்கும் என்ற சூளுரையுடன் சென்னைத் தலைநகரில் வங்கக் கடல் எனப் பெருகிடுக, சங்கம் முழங்கிடுக, எங்கள் பகைவர் எங்கே மறைந்தார் என்று! அதில் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார். (ச-5)

# வடமராட்சி கல்வி வலயத்தில் இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வடமரர்ட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இணைப்புப் பெற்று கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளக் கொடுப்பனவை வலயக் கல்வி அலுவலகத்தில் தமது வரவுச் சான்றிதழை சமர்ப்பித்து சம்பளப் பட்டியலில் கையொப்பமிட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என வடமராட்சி கல்வி வலய அலுவலகக் கணக்காளர் சோ.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (ஓ)

# கண்டெடுக்கப்பட்ட தங்க நகை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்ட ஒரு பவுண் பெறுமதியான தங்கநகை ஒன்று அதிபர் வி.கணேசராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளலாம் என அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# இன்று ஒரு தகவல்

## அளவுக்கு மிஞ்சினால்

அசடு அண்ணாசாமி என்று ஒருவர் இருந்தார்! அவர் அசட்டுத்தனமாக ஏதாவது பண்ணிக் கொண்டே இருப்பார். ஒரு நாள் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனார். டாக்டரும் சோதித்துப் பார்த்தார். சத்துக் குறைவாக இருந்தது. அதற்குத் தேவையான விற்றமின் மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

"இதில் 30 மாத்திரை வாங்கிக் கொள்ளுங்கள். தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தால் சரியாகப் போய்விடும்" என்றார். "டாக்டர்! நான் ஒரு யோசனை சொல்லலாமா? இந்த 30 மாத்திரையை எதற்காக 30 நாள் சாப்பிடச் சொல்றீங்க. ஒரே நாளில் சாப்பிட்டால் உடனே குணமாகி விடாதா?" என்றார். இது தான் அசடு அண்ணாசாமி!

அதன் பின் அந்த டாக்டர் எச்சரிக்கையாக இருந்தார். 30 மாத்திரையையும் தான் வாங்கி தினம் ஒரு மாத்திரை கொடுத்துக் கொண்டு வந்தார். இல்லையென்றால் விஷயம் விபரீதமாகிவிடும் என்பதை புரிந்து கொண் டார். இந்த அண்ணாசாமி மாதிரி நினைப்பவர்கள் நம்மிலும் பலபேர் உண்டு.

சத்து மாத்திரைகளை அதிகம் உட்கொண்டால் உடம்பில் அதிக சத்து சேரும் என்று பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. சத்து மாத்திரைகளை அளவுக்கதிகமாக உட்கொண்டால் தேவையில்லாத பல பிரச்சனைகள் வந்து சேரும். அதனால் கவனமாக இருக்க வேண்டும். மருத்துவரை அணுகாமல் நம்முடைய இஷ்டத்துக்கு உட்கொள்ளக் கூடாது.

விற்றமின் D யை அதிகமாக உட்கொண்டால் அதன் காரணமாகவும், அதனால் ஏற்படும் இரத்த கல்சிய அதிகரிப்பு காரணமாகவும், பல உடல் கோளாறுகள் ஏற்படும். விற்றமின் Dயை ஒருவர் ஒரு நாளைக்கு 4000 யுனிற் அளவுக்கு உட்கொண்டால் அதன் காரணமாக உடல் அசதி, மனச்சோர்வு, மூளைக் குழப்பம், குமட்டல், வாந்தி, பசியின்மை, மலச்சிக்கல், அதிகசிறுநீர் போக்கு, இதயத் துடிப்பு சீரின்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

விற்றமின் D காரணமாக உடம்பில் கல்சியம் 13 மில்லி கிராம் வரை அதிகரித்தால் கல்சியகல் உண்டாகும். சிறுநீரகம், நுரையீரல், இதயம், இரத்தக்குழாய், தோல் போன்ற பகுதிகளில் கல்சியகல் உண்டாகும்.

400 யுனிற் விற்றமின் Dயினால் சிலசமயம் ஒவ்வாமை காரணமாக உடம்புவலி, வயிற்றுவலி போன்ற நோய்களை உண்டாக்கும். விற்றமின் D யானது 18 மில்லியன் அளவுக்கு போய்விட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

அடுத்தது விற்றமின் A. விற்றமின் 'A' அடங்கிய மருந்துகளை குழந்தைகளுக்கு சாதாரணமாக கொடுக்கி றோம். கடல்மீன், கல்லீரல் என்பவற்றை தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு விற்றமின் A உடலில் அதிகமாவதால் வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, தலைவலி, மயக்கம், சோம்பல், கண்நரம்பு உறைவீக்கம், குழந்தையின் உச்சிப்பள்ளம் வீக்கம், தோல் உரிதல் போன்ற பாதிப்புக்கள் உண்டாகும்.

ஒருவர் ஒரு நாளைக்கு 40,000 யுனிற் வீதம் விற்றமின் Aயை தொடர்ந்து உட்கொண்டு வந்தாரானால், எலும்புவலி, மூட்டுவலி, எலும்புகளில் அதிக வளர்ச்சி, முடி உதிர்தல், உதடு – வாய் வறட்சி, பசியின்மை, உதடு வெடிப்பு, இலேசான காய்ச்சல், எடை இழப்பு, கல்லீரல் – மண்ணீரல் வீக்கம் எல்லாம் வந்துவிடும்.

விற்றமின் E அதிகமாக உட்கொண்டால் உடல் அசதி, சமிபாட்டு தெந்தரவு, தலைவலி, அதிக இரத்த அழுத்தம் என்பன உண்டாகும். விற்றமின் K அதிகமானால் கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை வரக்கூடும். விற்றமின் C அதிகமானால், உடலில் $B_{12}$ விற்றமின் குறைபாடு ஏற்பட்டு சிறுநீரகத்தில் ஒக்சலேட் கற்கள் உற்பத்தி ஆகலாம்!

இரும்புச்சத்து, துத்தநாக மருந்து ஆகியவற்றை அதிகமாக உட்கொண்டாலும் பல பாதிப்புகள் ஏற்படும். அதனால் எந்தச் சத்து மாத்திரைகளாக இருந்தாலும், மருந்தாக இருந்தாலும் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

நம்ம அசடு அண்ணாசாமியின் அசட்டுத்தனத்துக்கு இன்னொரு உதாரணம் கூட உண்டு. டாக்டர் ஒரு தடவை அவரிடம் ''தினம் 8 டம்ளர் தண்ணியாவது குடியுங்கள்!"என்றார். உடனே அவர் ''அது முடியாது டாக்டர்... தினம் 5 டம்ளர் தண்ணிதான் என்னால் குடிக்க முடியும்!" என்றார். ''ஏன்?" என்று கேட்டார் டாக்டர். அதற்கு அவர், ''எங்க வீட்டில் 5 டம்ளர் தானே இருக்கு" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சோவியத் யூனியனிடமிருந்து கொள்வனவு செய்த இராணுவ தளபாடங்களை ரஷ்யா திருத்தும்

## கோதபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சோவியத் யூனியனிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இராணுவத் தளபாடங்களை ரஷ்யா திருத்தித் தருமென பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனாக இருந்தபோது கொள்வனவு செய்யப்பட்ட இராணுவத் தளபாடங்கள் பழுதடைந்துள்ளன. சோவியத் நாடுகள் தனியாகப் பிரிந்திருப்பதால் இராணுவத் தளபாடங்களைத் திருத்திக் கொள்வதில் சிக்கல் தோன்றியுள்ளன. எனினும், இந்த இராணுவத் தளபாடங்களை ரஷ்யா திருத்திக் கொடுக்கும் என அவர் கூறினார்.

இராணுவ புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது இதுவரைரஷ்யாவுடன் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட கோதபாய பயங்கரவாத அமைப்புக்கள் மற்றும் இராணுவ விடயங்களை ரஷ்யாவுடன் பகிர்ந்து கொள்வதற்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கோதபாய குறிப்பிட்டார்.



இதேவேளை, தற்பொழுது வன்னிப் பகுதியில் நிலவும் மழையுடன் கூடிய காநிலை அரசாங்கப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினார். (ஓ-6)

# யுத்தப் பிரதேசத்தில் பொதுமக்கள் இல்லாவிடில் விரைவில் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு படையினர் முன் நகர்வுகளை மேற்கொண்டு



வரு வதனால் தமிழீழ விடு தலைப் புலிகளுடனான யுத்தம் காலம்தாழ்த்தப்படுவ தாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதில் படையினர் அதிக கவன்ம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த பிரதேசத்தில் சிக்கியிருக்கும் பொதுமக்கள் இல்லாவிட்டால் சில தினங்களில் போராட்டத்தை முடிவுக் குக் கொண்டுவர முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

உயரிய ஒழுக்கத்தைப் பேணி வரும் படையினர் பொதுமக்களின் பாதுகாப்பை மிகவும் மதித்து செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரை படையினர் தற்போது அண்மித்துள்ளதாக மஹிந்த குறிப்பிட்டுள்ளார். (ஓ)

## இராசி பலன்

23.10.2008
(ஐப்பசி 7, வியாழக்கிழமை)
நவமி காலை 7.11 மணிவரை
தசமி பின்னிரவு 5.39மணிவரை
ஆயிலியம் மாலை 6.05 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02மணிவரை
சுபநேரம்7.32 -9.02மணிவரை
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, ரோகநிலை, அதிக பிரயாசை. |
| இடபம் | இஷ்டசித்தி, சுபநிகழ்வு, அன்னியர் சந்திப்பு, மனோதைரியம். |
| மிதுனம் | மனோசங்கடம், தொழில் ஆர்வம், கௌரவக் குறைவு, பொருள் விரயம். |
| கடகம் | தெய்வ சிந்தை, வெகுமானம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, முயற்சி தாமதம், கோபப்படுதல், பிரயாணம். |
| கன்னி | தெய்வதரிசனம், சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய நன்மை. |
| துலாம் | நண்பர்கள் உதவி, தொழில் முன்னேற்றம், பெருமையடைதல், தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, உஷ்ண வியாதி, பிரயாணம். |
| தனுசு | கௌரவக்குறைவு, வேலைச் சுமை, அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வ தரிசனம், கலந்துரையாடல், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| கும்பம் | சுகவாழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, புதிய திருப்பம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு. |

வளவன்

# விண்ணப்பம் கோரல்

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு IIஇன் தரம்IIஇல் கணக்காய்வு அத்தியட்சகரின் ஏழு பதவிகளுக்காக தொழில் சார் தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்தாரி எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதி அன்று 22வயதிற்கு குறையாமலும் 45வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் அத்துடன் இலங்கைபட்டய கணக்காளர் நிறுவனம் அல்லது இலண்டன் மற்றும் வேல்ஸ், முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனம், சான்றுபடுத்திய பட்டயக் கணக்காளர் சங்கம் ஏதாவதொரு நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றின் உறுப்புரிமை பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய் வாளர் தலைமைஅதிபதி திணைக் களம் கொழும்பு 7என்ற முகரிக்கு பதிவுத் தபாலில் அனுப் பப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 24/10/2008 ஆம் திகதிய வர்த்த மானியிலோ அன்றி வலம்புரிக் காரியலயத்திலோ பார்வை யிடலாம். (ஓ-6)

# சீனா, பாகிஸ்தான் வழங்கும் தைரியமே இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு காரணம்

## சிவாஜிலிங்கம் எம். பி. தெரிவிப்பு

(இராமேஸ்வரம்)

சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தைரியத்தால் தான் இலங்கை அரசு இந்தியாவின் குரலுக்கு செவிமடுக்காமல் இருக்கின்றது என இராமேஸ்வரம் வந்த இலங்கை தமிழ் எம். பி. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை யாழ்ப்பாணம் தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் திங்கட்கிழமை இராமேஸ்வரத்தில் நிருபர்களுக்களித்த பேட்டியின் போது மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது. இந்த படுகொலைக்கு எதிராக தமிழ்நாட்டில் அனைத்துக்கட்சிகள் மட்டுமல்லாது பல்வேறு அமைப்புக்களும் குரல் கொடுத்து வருகின்றன.

இவ்வளவு குரல் கொடுத்தும் இலங்கை அரசு சிறிது கூட செவி சாய்க்காமல் தொடர்ந்து தமிழர்களை படுகொலை செய்து வருகின்றது. இதற்கு சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தைரியத்தால் இலங்கை அரசு செயற்படுவதே காரணமாகும். எனவே இதற்கு ஒரு முடிவு கட்ட இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை இந்தியாவின் மாநிலம் கிடையாது. இது உள்நாட்டு பிரச்சினை இதில் இந்திய அரசு தலையிடுவது நியாயம் இல்லை என்று இலங்கை அமைச்சர் கூறுகிறார். 2000 ஆம் ஆண்டு யாழ். குடா பகுதியில் புலிகள் ஊடுருவி இலங்கை இராணுவ முகாமை கைப்பற்ற முயற்சி எடுத்தனர்.

அப்போது 40 ஆயிரம் படை வீரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிந்தவுடன் வாஜ்பாய் தலைமையில் இருந்த இந்திய அரசிடம் அப்போதைய அதிபர் சந்திரிகா உதவி கோரியதை நினைத்து பார்க்க வேண்டும். (ஓ-6)

## நிறுவுநர் நினைவு நாள்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்.இந்துக் கல்லூரி , கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் பலாலி ஆசிரியர் கலாசாலை வருகை விரிவுரையாளருமாகிய அ.பஞ்சலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (ஓ-4)

## காரைநகரில் 'கலாநிதி' புதிய விளையாட்டுக் கழகம்

(காரைநகர்)

காரைநகரில் கலாநிதி என்ற பெயரில் புதிய விளையாட்டுக் கழகம் ஒன்று உதயமாகியுள்ளது. இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நடராஜா மண்டபத்தில் நடைபெற்றது.

இப் புதிய கலாநிதி விளையாட்டுக் கழகத்தின் தலைவராக ச.இராசநாயகம், உபதலைவராக அ.கிருஷ்ணராசா, செயலாளராக க.நிமலதாசன், உபசெயலாளராக தி.மகேஸ்வரன்,பொருளாளராக இ.புஸ்பராசா ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக வி.சங்கர், கு.இராகுலன், செ.புஸ்பலிங்கம்,எஸ். சுபாஸ் சந்திரபோஸ்,எஸ்.பத்மநாதன், ந.முருகதாஸ் ஆகிய ஆறு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்விளையாட்டுக் கழகத்தில் காரைநகர் பிரதேசத்தினைச் சார்ந்த எவரும் இணைந்து கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் காரைநகர் வடகிழக்கு கிராமசேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம், காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஓ-246)

## கருத்தரங்கு

உலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்றாக நல்லூர் பொதுநூலகத்தில் இன்று வியாழக்கிழமை ''கற்றலும் மீள் ஞாபகமூட்டலும்'' எனும் தலைப்பில் டாக்டர் இ.சிவசங்கர் கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ)

## குழந்தைகளை தத்தெடுக்க விரும்புவோர் விண்ணப்பிக்கவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பொறுப்பில் உள்ள ஐந்து குழந்தைகளை தத்துக் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

குழந்தைகளை தத்தெடுக்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை இம்மாதம் 30 ஆம்திகதிக்கு முன் பதிவாளர், நீதவான் நீதிமன்றம் சாவகச்சேரி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும் என்று விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழ், சொத்து விபரம் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி என் ஆகிய விபரங்களையும் இணைத்து அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 23

ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும், அத் தொழிலினை சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையராவர்.

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பள மாற்றம் செய்து வழங்குவதில் தாமதம்

யாழ்.மாவட்டத்தில் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கு தரம் I க்கான சம்பள மாற்றம் செய்து வழங்கப் படவில்லை என்று சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் தரம் II இல் இருந்து தரம் I என பதவி உயர்த்தப்பட்ட கடிதமும் கிடைக்கப்பெற்றது.

ஆனால் இருபத்தியிரண்டு மாதங்களாகியும் இன்னும் வரை தரம் I இற்கான சம்பள மாற்றம் செய்து வழங்கப்படவில்லை என்றும் இதற்கு யாழ். மாவட்டச் செயலக அலுவலர்களின் அசமந்தப்போக்கே காரணம் என்று மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ-246)

# கூரையமைப்பை மாற்றித் தருமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கில் அமைந்துள்ள நாகதம்பிரான் குடியேற்றத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 36 வீடுகளில் மழை காலங்களில் கூரையினூடாக மழை நீர் உட்புகுந்து பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இக் கூரைகளின் அமைப்பை மாற்றி அமைத்து தருமாறு குடியேற்றவாசிகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்கள்.

மேற்படி குடியேற்ற திட்டம் 2006 ஆம் ஆண்டு 36 வீடுகள் மூவிர்மொண்டே நிறுவனத்தால் கையளிக்கப்பட்டது. ஒவ்வொரு வீடுகளும் (25X20) 500 சதுர அடி கொண்டதாகும். இந்த வீடுகள் அமைக்கப்படும் போது கூரைப் பகுதியிலுள்ள சிலாகைகளின் எண்ணிக்கை குறைவாகப் பொருத்தப்பட்டதால் ஓடுகள் மிக ஐதாக வேயப்பட்டது.

இதன்காரணமாக மழைகாலங்களில் மழைநீர் வீடுகளில் உட்புகுந்து பொருட்கள் நனைந்து பழுதடைந்தும் எமக்குபலத்த சிரமத்தினை ஏற்படுத்தி வருகிறது. அத்தோடு கூரையிலுள்ள மரங்கள், சிலாகைகள் உக்கி பழுதடைந்து வருகின்றன.

ஆகவே இந்த கூரை அமைப்பை மாற்றி ஆவன செய்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என குடியேற்றவாசிகள் கேட்டுள்ளனர். (ஓ-35)

# விருது பெறும் எழுத்தாளர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு "சிறுவர்களுக்கான தேசிய மரபுரிமை" என் னும் கருப்பொருளில் நடத்திய ஆக்கத்திறன் இலக்கியப் போட்டியில் (2008) கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் பெ.ஸ்ரீகந்தநேசன் இரண்டு விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

2003 இல் இலக்கியத் துறையில் பிரவேசித்த இவர், இளைஞர் விருது, விபவி விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இலங்கை, இந்திய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளும் தொடர்ந்து எழுதி வருகின்றார். இரண்டு சிறுகதைத் தொகுதிகளினையும் வெளியிட்டுள்ளார்.

பாடல் இயற்றுதல், கவிதை, சிறு கதை, கட்டுரை போன்ற துறைகளில் ஆளுமை கொண்டவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாக கற்று,இரண்டாம் வகுப்பில் சித்தியெய்தினார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முது தத்துவமாணி முதலாம் வருட மாணவனாக உள்ளார். (ஓ)




## மக்கள் வங்கியின் தீபாவளி கொடுக்கல் வாங்கல்

தீபாவளி தினத்தை முன்னிட்டு 27 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள ஊர்காவற்றுறைக் கிளை தவிர்ந்த ஏனைய அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 8 மணிமுதல் 12மணிவரை திறந்திருக்கும் எனவும், அன்றைய தினம் வைப்பிலிடுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும் எனவும் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா அறிவித்துள்ளார். (ஓ)

## நூல் வெளியீட்டு விழா

இலங்கை வரலாறு வினா விடை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கலாநிதி ஆ.தியாகராஜா மகா வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி யு. சிறஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை வித்தியாலய ஆசிரியர் க.கருணானந்தனும் வெளியீட்டுரையை ஆசிரியர் அ.மனோகரனும் ஆற்றவுள்ளனர்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி பெற்றுக்கொள்வார். ஏற்புரையை நூலாசிரியர் கு.சுதாகரனும் நன்றியுரையை ந.கணேசமூர்த்தியும் வழங்கவுள்ளனர். (ஓ)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம் சார்பில் சுவாமி விவேகானந்தரின் "எழுந்திரு, விழித்திரு" காண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி சுமித்தரை சிவநாதனுக்கு சுவாமி சித்ரூபானந்தா நூல் வழங்குவதையும்,அருகில் உப அதிபர் திருமதி ருக்மணி ராஜரத்தினம் நிற்பதையும் மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'பெரியபுராணம்' தொடர் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆற்றவுள்ளார்.(ஓ-35)

## பொழுதுபோக்கு மண்டபம் அமைக்க அனுமதி

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கெருடாவில் வடக்கு தொண்டைமானாறு வடக்கு ஆகிய கிராமங்களில் பொழுதுபோக்கு மண்டபம் நெக்டெப் திட்டத்தின் கீழ் அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக அண்மையில் நடைபெற்ற பிரதேச செயலர் பிரிவு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலரினால் தெரிவிக்கப்பட்டது. (ஓ-35)

## கலவன் பாடசாலையில் பெண் ஆசிரியை இல்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு யா/குடத்தனை கரையூர் அ.மி.தமிழ் கலவன் பாடசாலையில் பெண் ஆசிரியை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் உதவி அரசாங்க அதிபர் ஊடாக வடமராட்சி கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்கள்.

மேற்படி பாடசால்லயில் 76 ஆண் மாணவர்களும் 60 பெண் மாணவிகளுமாக மொத்தம் 136 மாரணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.

இப் பாடசாலையில் முன்பு பெண் ஆசிரியர்களும் கற்பித்து வந்தார்கள். ஆனால் அவர்கள் இடமாற்றம் பெற்று சென்றபின் கடந்த சில வருடங்களாக பெண் ஆசிரியைகள் எவரும் இங்கு கல்வி கற்பிப்பது கிடையாது. சிறுவர்கள் உரிமை பேணப்படுவ தற்கு இத்தகைய ஒரு கலவன் பாடசாலையில் பெண் ஆசிரியை கல்வி கற்பிப்பது முக்கியமான ஒன்றாகும்.

ஆகவே இப்'பாடசாலைக்கு ஒரு பெண் ஆசிரியையை நியமிக்குமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரையும் வடமராட்சி கல்விப் பணிப்பாளரையும் எழுத்துமூலம் அப் பகுதி மக்கள் கேட்டுள்ளார்கள். (ஓ-35)

## 'சிசு உதான' அலகு திறப்பு விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கி கிளையால் யா/தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் "சிசு உதான" அலகு திறக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் மக்கள் வங்கி உதவிப்பிரதேச முகாமையாளர் கென்றி இதனை திறந்து வைப்பார்.

கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இர்ராதாகிருஷ்ணன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி ச.பாஸ்கரன்,நாரந்தனை வடக்கு ஜே/56 தம்பாட்டி கிராமசேவையாளர் க.சகாதேவன், தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் சி.முத்துராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஊர்காவற்றுறை மக்கள் வங்கி கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

## பயிர்ச் செய்கையாளருக்கு தொல்லை தரும் பன்றிகள்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் வீட்டுப் பன்றிகள் காய்கறிப் பயிர்களை நாசம் செய்து வருவதாக பயிர்ச் செய்கையாளர் ஒருவர் நமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தற்பொழுது மழை பெய்து வருவதால் பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

# நோத்முதல் கோப்லவா வரை 133

### சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள்

அன்றி உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளுள் பெரும்பாலானோர் ஆள்பதியினால் நியமிக்கப் பெற்றார்கள். எனவே அன்னாரும் "ஆள்பதியின் சின்ன விரல் அசைவில் அவருக்கே ஊழியராயிருந்தார்கள். ஆகவே அக்காலத்துச் சட்ட சபை வைகல்கள் ஆள்பதியின் அதிகாரத்துக்கு ''அப்படியேயாகுக'' என்று ததாஸ்துக் கூறுவதற்கும், வரவு செலவுத் திட்டத்தைப் பேசுவதற்கும் தங்குறைகளை எடுத்துப் பேசுவதற்குமே இடமளித்தன.

பீரிஸ் டி.ஆர்.விஜயவர்த்தனாவின் உதவியுடன் சமூக சேவைச் சங்கத்தை 1914 ஆம் ஆண்டில் ஆரம்பித்த இலங்கை வாழ் மக்களின் வாசற்படியில் கல்வி வசதியைக் கொண்டு வருவதற்காக ஒத்துழைத்தார்கள்.

பீரிஸ் அவர்களின் அயரா உழைப்பும் உதவியும் அருணாசலத்துக்கு நிரம்பக் கிடைத்தது. அருணாசலம் தேசிய மகா சபையின் முதற்றலைவராய்த் தலைமையுரையை நிகழ்த்திய பின் அரசியற்றிருத்தங் கோரி இங்கிலாந்துக்குப் போன காலத்தில் அன்னாருக்கு உதவியாகப் பீரிஸ் உடன் சென்றார்கள்.

மாட்சிமை தங்கிய மன்னர்பிரானின் அரசாங்கம் இலங்கை அரசியலமைப்பில் முதன் முதலாக ஆள்புலவாரியாகப் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்துவதற்காக 28.7.1920 இல் பொதுமக்கள் சபையில் அறிவித்தபோது முதன்முதலாகச் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தொகை உத்தியோக அங்கத்தவர் தொகையிலும் பார்க்க அதிகமாயிருக்கும் என்றும் விளக்கினர்.

### மீள் பார்வை

ஆனால் ஆள்பதியின் அதிகாரம் அத்துமீறிப் பிரயோகிப்பதற்கும் அத் திட்டத்தில் இடம் இருந்தது.

அதனை இலங்கைத் தேசிய மகா சபையினர் சிறிதும் விரும்பவில்லை. எனவே தேசிய மகாசபையினர் 1920 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் ஒரு விசேட கூட்டத்தைக் கூட்டித் தமக்குப் பிற்போக்கானதும், உபயோகமற்றதுமான அத் திட்டம் வேண்டத்தக்கதன்று எனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

சட்டசபையின் அதிகாரம் மேலும் அதிகரிக்க வேண்டிய சமயத்தில் குறைவதையும், ஆள்பதியின் செல்வாக்கு குறைய வேண்டிய சமயத்தில் அதிகரித்தலையும், கலந்துரையாடல் இகலாட்டுகளைக் கட்டுப்படுத்தலையும், சட்டநிர்வாகத்துறை கட்டுப்படுத்தப்படுவதையும், மக்கள் பிரதிநிதிகளின் மேல் ஏளனமான தடைகள் விதிக்கப்படுவதையும், இலங்கை வாழ் பொதுமக்கள் இனவாரியாகப் பிரிக்கப்படுவதையும், பொறுப்பாட்சியின் அத்திபாரங் கூட அமையாத அந்தத் திருத்தத்தையும் தேசிய மாநாட்டினர் அறவே வெறுத்தனர்-நிராகரித்தனர், ஒத்துழைக்க மறுத்தனர்.

இந்த விசேட கூட்டத்துக்குத் தேசிய மகா சபையின் அபிமானத் தலைவரான அருணாசலம் தலைமை தாங்கவில்லை. அன்னாரிடத்தில் யேம்ஸ் பீரிஸ் தலைமை தாங்குவாராயினர். யேம்ஸ் பீரிஸ் தலைமையைப் பற்றி அருணாசலம் வரவேற்றுப் பேசும்போது யேம்ஸ் பீரிசின் நல்லியல்புகளையும் திறமைகளைய்யும் பின்வருமாறு கூறினார்.

யேம்ஸ் பீரிஸ் அவர்களுடைய முதிர்ந்த அனுபவம், சிறந்த பண்பாடு, அசையாத நடுநிலைமை, உயர்ந்த குணச்சிறப்பு ஆகியவற்றின் மூச்சுப்படாமல் இலங்கையில் எந்தப் பகிரங்க இயக்கமும் இருக்கவில்லை. அவர்கள் ஓர் ஒப்பற்ற தலைவர், இராசவிசுவாசமும், தேசாபிமானமும், பொது நல சேவைப்பண்பும், கலந்துரையாடிக் காரியங்களை நிர்ணயிக்கும் தாராளமான



மன விசாலமும் உள்ள பெரியார் யேம்ஸ் பீரிஸ். அவர் இலங்கை வாழ் மக்களின் நன்மதிப்பை நிரம்பப் பெற்றுள்ளார். இத்தகைய விற்பத்திமானாய் விளங்கும் இப் பெரியாரை இலங்கை அரசாங்கமோ, இலங்கைச் சட்டசபையோ உரிய இடம் அளித் துப் போற்றிக் கௌரவிக்காதிருப்பது மெத்த விசனிக்கத்தக்கதாகும்''

**க.சி.குலரத்தினம்**

இங்ஙனம் பேசிய அருணாசலம் இதுகாறும் பீரிஸ் அவர்களோடு தோளோடு தோளாக நின்று சேவை செய்த பெற்றியையும் மறந்து தேசிய மகாசபையை விட்டு வெளியேறி விட்டார். அத்தோடு அவர்களைக் கண்டு சட்ட சபைத் திருத்தங்களைப் பற்றிக் கலந்துரையாட நியமிக்கப்பட்ட பேராட் குழுவில் ஒருவராய் இருப்பவும் அருணாசலம் மறுத்துவிட்டார் அது நிற்க. (தொடரும்)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரிய தினத்தைப் பிரதம விருந்தினரான தென்மராட்சிப் பிரதேச செயலர் செல்வ ஸ்ரீனிவாசன் கொடியை ஏற்றி ஆரம்பிப்பதையும், அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் நிற்பதையும், ஆசிரியைகள் ஆசிரியகீதம் இசைப்பதையும், அபிவிருத்திச் சங்க உறுப்பினர் எஸ்.பரமானந்தம், மாணவத் தலைவி செல்வி மதுரா பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவதையும், விழாத் தலைவர் கே.ஜெயபாலன் இருப்பதையும், பிரதம விருந்தினர் ஆசிரியைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும்போது ஆசிரியை செல்வி எஸ். ஜீவதுளசி பரிசில் பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் 8



7%-10% பொருளாதார வளர்ச்சியை சாதித்து. அதனை நீடித்திருக்கச் செய்யுமாயின் வறுமையை தனி இலக்கத்திற்கு குறைக்கமுடியும் என ஏற்கனவே நோக்கினோம். ஆயினும் கிழக்காசியாவினது துரித வளர்ச்சிக்கான அம்சங்களை தெற்காசியா கொண்டுள்ளதா என்பது இங்கு முக்கியமானது. இவ்வகையில் சில முக்கிய அம்சங்களில் இரு ஆசியாக்களினது நிலையையும் ஒப்பிடுவது அவசியமாக உள்ளது.

**தயாரிப்புத் தொழில்**
**(Manufacturing)**

துரித பொருளாதார வளர்ச்சிக்கு தயாரிப்புத் துறையின் பங்கு முதன்மையானது என கூறப்படுகின்றது. இந்த வகையில் தெற்காசியாவில் தயாரிப்புத் தொழிலினது கூட்டிய பெறுமதி (Value added) அண்மைய ஆண்டுகளில் ஆரோக்கியமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளபோதும் கிழக்காசியாவின் நிலையை எட்டுவதற்கு இன்னும் வேகமாக அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. இதனை விளக்கப்படம் -2 தெளிவுபடுத்துகின்றது.

1968-2001 காலப் பகுதியில் ஒரு காரணியால் அதிகரித்த தயாரிப்பு தொழிலிலான கூட்டிய பெறுமதி தென்கொரியா, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் முறையே 40,27,17 ஆக உள்ளது. இதனை இந்தியா, பாகிஸ்தானுடன் ஒப்பிடுகையில் அங்கு முறையே 6,7 ஆக மிகக் குறைவாக உள்ளது. கூட்டிய பெறுமதியின் பங்கு மலேசியாவில் 400% ஆக அதிகரித்துள்ளதுடன் தாய்லாந்தில் 300% கொரியாவில் 200% க்கு அதிகமாகவும் அதிகரித்ததுள்ளது. ஆனால் இந்தியா, பாகிஸ்தானில் இது முறையே 20%, 30% என்பதாகவே உள்ளது.

**ஏற்றுமதி நோக்கிய தன்மை**
**(Export orientation)**


ஏற்றுமதி மூலமான பொருளாதார வளர்ச்சியானது GDP மற்றும் காரணியையும் வினைத்திறனையும் ஊக்குவிக்கிறது. தெற்காசியாவின் ஏற்றுமதி செயலாற்றுகைகள் அதிகரிக்கின்றபோதும் வெற்றிகரமான கிழக்காசியப் பொருளாதாரங்களை விடக் குறைந்த நிலையிலேயே உள்ளன. மலேசியா, தாய்லாந்து, கொரியா ஆகிய நாடுகளின் GDPயிலான ஏற்றுமதி விகிதமா்னது பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளை விட மிக உயர்வாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தொழில்நுட்ப ரீதியான பலம்**

ஏற்றுமதி செயன்முறையானது தொழில்நுட்ப விருத்தியில் தங்கியுள்ளது. சீனா, மலேசியா, தாய்லாந்துபோன்ற முன்னணி கிழக்காசிய பொருளாதாரங்கள் தொழில்நுட்பவளர்ச்சியின் உச்ச எல்லையை எட்டிவிடும வேகத்தில் வளருகின்றன. ஆனால் இந்தியா தவிர்ந்த ஏனைய தெற்காசிய நாடுகளில் உயர்ந்த

விளக்கப்படம் -2

சில தெற்கு மற்றும் கிழக்காசிய பொருளாதாரங்களில் தயாரிப்புத் தொழில் கூட்டிய பெறுமதி (1995 இல் US$ மில்லியனில்)




(மூலம் -உலக அபிவிருத்தி சுட்டிகள். வேறுபட்ட ஆண்டுகள்)

உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆகியவற்றினை உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு உதவி செய்வதாக கூறப்படுகின்றது.

ஏனெனில் அத்தகைய பொருளாதார வளர்ச்சி வளங்களின் போட்டித் தன்மையி

தொழில்நுட்ப செறிவான உற்பத்திகள் மொத்த ஏற்றுமதியில் சிறியளவு பங்கினையே வகிக்கின்றன. ஆயினும் இந்தியாவில் ஓரளவுக்கு வாகன உதிரிப்பாகங்கள், கணனி போன்ற உற்பத்திகளில் தொழில்நுட்ப செறிவான முறைகள் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திறன் மிக்க தொழிலாளர்கள்**

தெற்காசியா, திறமை வாய்ந்த தொழிலாளர் நிரம்பலில் கிழக்காசியாவினை விடக் குறைந்த நிலையிலேயே உள்ளது. தொழிலாளர்களது திறன்களை அதிகரிப்பதாக இரண்டாம் நிலைக் கல்வி மற்றும் சராசரிக் கல்வி கற்கும் வருடங்கள் ஆகியன காணப்படுகின்றன.

இவை இரண்டும் தொழிலாளரது பயிற்றுவிக்கக் கூடிய தன்மை (Trainability) பற்றிய தகவலை வழங்குகின்றன. FDI இனை கவரும் கைத்தொழில் திறன்கள் ஒரு பயிற்றவிக்கத்தக்க ஊழியப் படையால் எளிதாக்கப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளில் தெற்காசியப் பொருளாதாரங்களை விட கிழாக்காசியா சிறந்த நிலையிலுள்ளது. 2000 ஆம் ஆண்டு மதிப்பீடுகளில் இரண்டாம் நிலை கல்வியில் இணைவோரின் மொத்த அளவு தாய்லாந்து, சீனா என்பவற்றில் முறையே 85%, 70% எனக் காணப்பட பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் முறையே 45%, 48%, 40% எனக் காணப்படுகின்றது.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

அதே ஆண்டில் சராசரியாக பாடசாலையில் கற்கும் ஆண்டுகள் தாய்லாந்து, சீனாவில் முறையே 6.5, 6.4 வருடங் களாகவும் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ் தான் ஆகிய நாடுகளில் முறையே 5.1, 2.6, 3.9 வருடங்களாகவும் காணப்படுகின்றது. (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

**பகுதி A** **பரீட்சை XIV** **நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1 $150m\ell + 750m\ell = \square m\ell$ ______ $m\ell$

2 ABCD சாய்ச துரம் AB=6cm. BC= ______ cm

3 6ன் முதன்ன ைம காரணிகளின் தொடை ______

4 $2^3$ இன் டெ றுமானம் ______

5 $\pi = 3.14$ ,எனின் $10\pi$ இன் பெறுமானம் ______

6 ஐங்கோ ணியின் ஐந்து அகக்கோணங்களினதும் கூட்டுத் தொகை 540° ஆகும்.

ஐங்கே ாணியின் 4அகக்கோணங்களினது கூட்( டுத் தொகை 420°.
ஐந் தாம் கோணம் = ______°

7 $\frac{1}{1}\frac{}{6}\times 4 =$ ______

8 ABன் நடுப்புள்ளி D.AB=10cm.AD=? ______cm

9 y=x² -2xல்= 1ஆயின் y= ______

10 நாணின் நடுப்புள்ளியையும் மையத்தையும் இணைக்கும் கோடு அந்நாணிற்கு செங்குத்தாகும்.

O மையம்.AB நாண்.ABன் நடுப்புள்ளி M.ஆகவே $O\hat{M}A$ ன் பருமன். ______

### B — Answer

1 $8\ell 550m\ell - \frac{1}{4}\ell$ எத்தனை $\ell$ ______ $\ell$

2 சாய்சதுரத்தின் ஒரு உச்சியிலிருந்து எதிர் பக்கங்களுக்கு வரையும் செங்குத்தின் நீளம் பற்றி யாது கூறுவீர்? ______

3 1540 முதன்மைக்காரணிகளின் தொடை $\{2,5,7,11\}$. இதே முதன்மைக்காரணிகளை தொடையாகக் கொண்ட ஆயிரத்திலும் குறைந்த எண் ______

4 $3^3 + 4^3$ இன் பெறுமானம் யாது? ______

5 100cmஆரை கொண்ட வட்டத்தின் சுற்றளவை mல் தருக.இங்கு $\pi = 3.14$ ______

6 ஐந்து பக்கங்களும் சமனாகவும்,ஐந்து கோணங்களும் சமனாகவும் உள்ள ஐங்கோணி ஒழுங்கான ஐங்கோணி எனப்படும்.

ஒழுங்கான ஐங்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானம் யாது? ______°

7 $\frac{1}{16},\frac{1}{4},......$ என்ற பெருக்கல் விருத்தி தொடரில்பொது விகிதம் என்ன? ______


8 12cm சுற்றளவு முக்கோணியின் பக்கங்களின் நடுப் புள்ளிகளை இணைக்கும் முக்கோணியின் சுற்றளவுயாது? ______

9 $y = x^2 - 2x$ ஐ $y = (x-1)^2 + \square$ என எழுதும் போது கூட்டில் வரும் எண் யாது? ______

10 புள்ளிO மைய வட்டநாண் ABன் நடுப்புள்ளி P. AB=8cm.OP=3cm எனின் ஆரை ______cm

### C — Answer

1 150 $m\ell$ ஐ 750 $m\ell$ இன்
a) எளிய வடிவில் பின்னமாக ______
b) சதவீதமாக எழுதுக.

2




இது ஒரு சாய்சதுரம்.
a) இதன் பரப்பளவைக் காண்க.
b) h இன் பெறுமானம் எவ்வளவு.
a)______
b)______

3 30=2x3x5
45=3x3x5
30,45 இன் a) பொ.கா.பெ
b) பொ.மா.சி யாது?
a)______
b)______

4 1125 = 125 + 1000

$1125 = a^3 + b^3$ என எழுதும் போது $a, b$ ன் பெறுமானங்களை எழுதுக. இங்கு $a < b$ ______


5 6m விட்டம் கொண்ட வட்டத்தின் gugysit $m^2$ ல் காண்க.$\pi$=3.14 ______

6


தரப்பட்டுள்ள ஐங்கோணியில் 4 கோணங்கள் ஒன்றுக்கு ஒன்று சமனாகும்.அக்கோணங்களில் ஒன்றைக் காண்க. ______

7 முதலுறுப்பு 12 உம் பொதுவிகிதம் ½ ஆகவுமுள்ள பெருக்கல் விருத்தித் தொடரில் 9ம் உறுப்பை உரிய சூத்திரத்தை பயன்படுத்திக் காண்க. ______


8 ஒரு முக்கோணியின் ஒரு பக்கத்தினது நடுப்புள்ளியின் ஊடாக வேறொரு பக்கத்திற்கு சமாந்தரமாக வரையப்படும் நேர்கோடு மூன்றாம் பக்கத்தை இருசம கூறிடும்

உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப



a) CE இற்கு சமமான ஒரு கோட்டுத்துண்டத்தை எழுதுக.
b) DE=6cm எனின் AB இன் நீளத்தைக் காண்க.
a)______
b)______

9 சார்பு $y = x^2 - 2x$ ன் வரைபிலுள்ள 3 புள்ளிகளை காண்பதற்கு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| x | -4 | 0 | 2 |
|---|---|---|---|
| y | __ | __ | __ |




உருவில் O மையம்.
a) $O\hat{X}B$ இன் பருமன் யாது
b) OX=OM எனின் AB,CD இன் தொடர்பை எழுதுக.
a)______
b)______


### D — Answer

**1**

1kg நீரின் கனவளவு $1\ell$.

ஒரு பாத்திரம் நீரால் நிரம்பியிருந்த பொழுது அதன் நிறை 1.25kg.பாத்திரத்தின் நிறை 350g ஆகும்.பாத்திரம் கொண்டுள்ள நீரின் அளவை

a) $\ell$ b) $m\ell$ இல் தருக.
a)______
b)______


**2**



ABCD ஒரு சாய் சதுரம்.ABCD இன்
a) எல்லா பக்கங்களின் நீளங்களும் சமனா?
b) எல்லா கோணங்களும் சமனா?
c) மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று செங்கோணத்தில் இரு சமகூறிடுமா?
d) AB=5cm உம் AC=6cm உம் ஆயின் BD இன் நீளம் யாது?
a)______ c)______
b)______ d)______


**ஜே.மரியநாயகம்**

**3** 493 ஐ இரு முதன்மைக்காரணிகளின் பெருக்கமாக எழுதுக. ______

**4** $1125 = x^{-3} + y^{-3}$ ஆயின் $x, y$ இன் பெறுமானங்களை எழுதுக. இங்கு $x < y$ ______


**5** இவ்வுருவில் நிழற்றப்பட்ட இரு அரைவட்ட பகுதியின்
a) சுற்றளவையும் b) பரப்பளவையும் $\pi, r$ சார்பில் காண்க



a)______
b)______


**6** ஐங்கோணியில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு a+b இன் பெறுமானத்தைக் காண்க.



______

**7** பெருக்கல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 5உம்,ஐந்தாம் உறுப்பு 40உம் ஆகும். அத்தொடரின்
a) பொது விகிதம் யாது?
b) முதலாம் உறுப்பு யாது?
a)______
b)______


**8** தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப



a) AE,EC தொடர்பையும்
b) AF,FB தொடர்பையும
c) EF,BC தொடர்பையும்எழுதுக.
a)______
b)______
c)______

**9** $y = x^2 - 2x - 3$ இன் வரைபை உரு காட்டுகிறது. அமைப்பை பயன்படுத்தி பின்வருவனவற்றை காண்க.


a) இழிவுப்புள்ளி
b) சமச்சீரச்சின் சமன்பாடு
c) சார்பு மறையாக உள்ள x இன் பெறுமான வீச்சு
d) $x^2 - 2x - 3 = 0$ இன் மூலகங்கள்

a)______ c)______
b)______ b)______

**10** உருவில் 13cm ஆரையுடைய வட்டத்தின் மையம் O ஆகும். OM ⊥ AB, MN//BC, AC=24cm



a) AM,BM தொடர்பை எழுதுக.
b) ∠ONC அளவைக் காண்க.
c) OM ,ன் நீளத்தைக் கணிக்க.
d) MN,BC தொடர்பை எழுதுக.
a)______ c)______
b)______ b)______

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# சூரியத்தொகுதியின் எல்லைப்பகுதியை ஆராய்வதற்கு முதலாவது விண்கலம் ஐ.பி. ஈ எக்ஸ் ஏவப்பட்டுள்ளது



நாசாவின் ஐ.பி.ஈ. எக்ஸ் விண்கலமானது பசுபிக் சமுத்திரத்திலுள்ள கவாஜலெயின் அதோல் எனும் இடத்திலிருந்து ஞாயிற் றுக்கிழமை அந்நாட்டு நேரப்படி பிற்பகல் 1.47 மணிக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.

மேற்படி விண்கலமானது சூரியத்தொகுதியின் எல்லைக்கு அப்பால் என்ன நடைபெறுகிறது என்பது தொடர்பான தரவுகளைச் சேகரித்து பூமிக்கு அனுப்பவுள்ளது. இத்தகைய ஆய்வு முயற்சிக்காக விண் கலமொன்று ஏவப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

ஐ.பி.ஈ எக்ஸ் என்பது நட்சத்திரங்களுக்கிடையிலான எல்லை ஆய்வு சாதனம் என் பதன் சுருக்கப் பெயராகும்.

நட்சத்திரங்களுக்கிடையிலான எல்லையில் நிலவும் குளிர்மையான வாயுக்கள் தொடர்பில் இந்த சாதனம் ஆய்வு செய்யவுள்ளது.

மேற்படி விண்கலமானது பிற்பகல் 1. 53 மணியளவில் அதனை ஏவப் பயன்பட்ட பெகாஸஸ் ஏவுகணையிலிருந்து தனிப்படுத்தப்பட்டு தனது சுய உபகரண முறைக் கட்டுப்பாட்டில் செயற்பட ஆரம்பித்துள்ளதாக கூறப் படுகிறது. 45 நா ள் பரிசோதனைக் காலக்கட்டத்தின் பிற்பாடு தனது இரு வருட கால விண்வெளி ஆய்வுப் பயணத்தை மேற்படி விண்கலம்ஆரம்பிக்கும் என கிறின்பெல்ட்டிலுள்ள நாசாவின கோட்டார்ட் ஸ்பேஸ் பிளைட் நிலையத்தின் முகாமையாளர் கிரெக் பிரெஸியர் தெரிவித்தார்.

மேற்படி விண்கலமானது சக்தியேற்றம் பெற்ற உயர்வேக அணுத்துணிக்கைகளின் விளைவுகளை அடிப்படையாக வைத்து சூரியத்தொகுதிக்கு அப்பாலுள்ள நிலைமை தொடர்பான பிரதிமை ஒன்றை தயாரிக்கவுள்ளது. இந்த பிரதிமையானது நுண்ணிய எண்ணற்ற வண்ணப் புள்ளிகளால் உருவாக்கப்படவுள்ளது.

சூரியனிலிருந்து அனைத்து திசைகளிலும் மணிக்கு ஒரு மில்லியன் மைல்வேகத்தில் வீசிய சூரியப் புயலொன்றையடுத்தே இந்த சூரியத்தொகுதி எல்லைப் பகுதி உருவாக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சூரியத்தொகுதி எல்லைப் பகுதியிலிருந்து அபாய மிக்க பிரபஞ்சக் கதிகள் பூமியை சுற்றியுள்ள விண்வெளி யைத்தாக்கக் கூடி வாய்ப்புள்ளதால் இது தொடர்பான ஆய்வு அவசியம் என நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த ஆய்வின் முடிவில் ஆச்சரிய மொன்று காத்திருக்கிறது என்பதை எம்மால் அறிய முடிகிறது என ஐ.பி .ஈ எக்ஸ் விண்க லத்தின் பிரதான ஆய்வாளர் டேவிட் மக்கொமஸ் தெரிவித்தார் (ஓ)

## மிதக்கும் ஹோட்டல்



(துபாய்)

அமெரிக்காவின் மியாமியைச் சேர்ந்த கார்னிவல் கார்ப் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் சொகுசுக் கப்பல் குயின் எலிசபெத்-2 இது .1967ஆம் ஆண்டு ரூ 470 கோடி மதிப்பில் (அப்போதைய) தயாரிக்கப்பட்டு பயணத்தைத் தொடங்கிய குயின் எலிசபெத் அதன் பயண காலம் முடிவடையும் நிலையில் நவம்பரில் கடைசியாக துபாய்க்கு பய்ணம் செய்யவுள்ளது.


அங்கு கப்பல் மிதக்கும் சொகுசு ஹோட்டலாக மாற்றி அமைக்கப்படும் பிறகு துபாய் அருகே மனிதர்களால் உருவாக்கப்பட்டவற்றில் உலகின் பெரிய தீவான பாம் ஜுமெய்ரா கடலோரத்தில் நிறுத்தப்பட்டு ஹோட்டலாக செயல்படும். (ஓ)

## உலக தரிசனம்

# உருக்கைவிட 10 மடங்கு மென்மையானதும் 500 மடங்கு உறுதியானதுமான கடதாசி கண்டுபிடிப்பு

### விமானத்துறையிலும் இலத்திரனியல் துறையிலும் புரட்சிகர மாற்றத்திற்கு வாய்ப்பு

சாதாரண காபன் கடதாசியைப் போன்று மெல்லியதாகத் தோன்றும் உருக்கை விட வன்மையான நவீன புரட்சிகர கடதாசியை அமெரிக்கப் புளோரிடா மாநில ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.



பக்கிபேப்பர் என அழைக்கப்படும் இக் கடதாசி உருக்கை விட 10 மடங்கு மென்மையானதாக காணப்படும் அதே சமயம் அது உருக்கை விடவும் 500 மடங்கு உறுதித் தன்மை மிக்கது என மேற்படி கடதாசியை உருவாக்கிய விஞ்ஞானி குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ரைஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வேட் அடம்ஸ் தெரிவித்தார்.

மேற்படி கடதாசியானது எதிர்காலத்தில் பாரம் குறைந்த விமானங்கள் அதிமெல்லிய தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பன உள்ளடங்கலான பொருட்களை உருவாக்க களம் அமைத்துத்தருவதாக உள்ளதென அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த கடதாசியை நடைமுறையில் உபயோகிக்க மேலும் பல தொழில் நுட்ப ரீதியான மேம்படுத்தல்களைச் செய்ய வேண்டியுள்ளது எனவும் இது தொடர்பில் பூரண நிலையை எட்ட இன்னும் சில ஆண்டுகள் செல்லக் கூடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி பக்கிபேப்பர் கடதாசியானது மனிதனின் கேசமொன்றை விட 50 000 மடங்கு நுண்ணிய குழாய் வடிவ காபன் மூலக்கூறுகளால் உருவாக்கப் பட்டுள்ளது.

இதன் அந்த அரிய உள்ளடக்கம் காரணமாக பாரம் குறைந்ததும் எரிபொருள் பயனுறுதிப் பாடு மிக்கதுமான விமானங்கள் மற்றும் வாகனங்கள் அதி செயற்றிறன் மிக்க கணினிகள் தொலைக்காட்சிப் பொட்டிகள் உட்பட அனைத்து உலோகப் பொருட்களையும் உருவாக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகி றது.

இந்த கடதாசி பாவ னைக்கு வரும் பட்சத்தில் விமானத் துறையில் தொழில்றுட்பப் புரட்சியை ஏற்படுத்தும் என லொக்ஹீட் மார்ட்டின் ஏவுகணை மற்றும் தீ கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தொழில்நுட்பத் தலைவர் லெஸ் கரமெர் தெரிவித்தார்.

இந்நிறுவகமானது இந்தப் புரட்சிகர கடதாசி கண்டு பிடிப்புக்குத் தேவையான நிதியுதவியை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# விமானப்படைத் தாக்குதல்களினால் 17 தலிபான் தீவிர வாதிகள் பலி

பாகிஸ்தான் வட மேற்கு எல்லை மாகாணத்தில் பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் குண்டு வீசி தாக்கியதில் 17 தலி பான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ் தானின் வட மேற்கு எல்லை மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகள் ஏராளமான பேர் தங்கியிருந்து பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ் தானிலும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களை ஒடுக்க பாகிஸ்தான் இராணுவம் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக நேற்று முன்தினம் வட மேற்கு எல்லை மாகாணத் தில் ஸ்வாத் பள்ளத்தாக்கு பகுதியில் தலிபான் நிலைகள் என்ற சந்தேகிக்கப்படும் சில இடங்களில் பாகிஸ் தான் விமானப்படையின் போர் விமானங்களும் பீரங்கி ஹெலிகொப்டர்களும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத் தினர்.

இந்த தாக்குதல்களில் 17 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதை பாகிஸ் தான் தொலைக்காட்சி நிறுவனங்களும் உறுதி செய்துள்ளன.

ஸ்வாத் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள சர் . மாங் லோய்சாம் பகுதிகளில் போர் விமானங்கள் நடத்திய குண் டு வீச்சில் பெண்கள் உட்பட 10 பேர் பலியானார்கள் இந்த தாக்குதலில் தலிபான் தீவிரவாதிகளின் பல மறைவிடங்களும் அழிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ)

# ஈராக்கில் பூட்டப்பட்டிருக்கும் மியூசியத்தை புதுப்பிக்க ரூபா 5 ஆயிரத்து 200 கோடி மானியம்

(பக்தாத்)

ஈராக் மீது அமெரிக்கா படை எடுப்பை தொடங்கிய பிறகு 2003ஆம் ஆண்டு பக்தாத்தில் உள்ள தேசிய மியூசியம் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த மியூசியத்தில் இருந்து 15 ஆயிரம் கலைப்பொருட்கள் மீட்கப்பட்டன. மியூசிய கட்டடமும் சேதம் அடைந்து அது முதல் அந்த மியூசியம் பூட்டப்பட்டுகிடக்கிறது. இந்த மியூசியத்தை புதுப்பிப்பதற்காக அமெரிக்கா ரூ.5200 கோடி மானியம் வழங்குவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளிநாட்டு இலாகா கல்வி கலாசார விவகார துணை மந்திரி கோலி அமேரி இந்த அறிவிப்பை வெளியிட்டார் இந்த மியூசியத்துக்காக முதலீடு செய்வது ஈராக்கின் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக மட்டும் அல்ல உலக பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகத்தான் என்று அவர் தெரிவித்தார். (ஓ)

# தாய்லாந்து முன்னாள் பிரதமருக்கு இருவருடச் சிறைத் தண்டனை

நாடு கடந்த நிலையில் வாழும் தாய்லாந்து முன்னாள் பிரதமர் தாக்ஸின் ஷினவட்ராவுக்கு எதிராகவுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்த அந்நாட்டு உச்ச நீதிமன்றம் அவரை குற்றவாளியாக இனங்கண்டு இரு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தனது மனைவி அரசாங்க விலையில் நிலமொன்றை வாங்க உதவி செய்ததாக தாக்ஸினுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான விசாரணையையடுத்தே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பிரித்தானியாவுக்கு பயணமான தாக்ஸினும் அவரது மனைவியும் மேற்படி விசாரணைகளானது நீதியான முறையில் இடம்பெறவில்லையென குற்றஞ் சாட்டியுள்ளனர்.

தாக்ஸினின் ஆதரவாளர்களுக்கும் எதிராளிகளுக்குமிடையிலான பதற்ற நிலை அதிகரித்துள்ள சூழ்நிலையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டமை முக்கியத்துவமிக்க ஒரு நிகழ்வாக கருதப்படுகிறது.

தாக்ஸினுக்கு எதிராக ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய முதலாவது தீர்ப்பாக இது விளங்குகிறது.

அரசாங்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டு தொடர்பில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தமை மியன்மாரிலிருந்து பெறப்பட்ட அரசாங்க கடனை குடும்ப வர்த்தகத்திற்காக பயன்படுத்தியமை வரி மோசடி உள்ளடங்கலான பல குற்றச்சாட்டுகளும் தாக்ஸினுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன. (ஓ-6)

## சீனாவில் மெலமைன் நஞ்சு உணவால் ஆயிரத்து 500 நாய்கள் இறப்பு

சீனாவில் மெலமைன் இரசாயனம் கலந்த உணவை உண்ட சுமார் 1,500 நாய்கள் இறந்துள்ளதாக அந்நாட்டு ஷென்யாங் விவசாய பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

மெலமைன் நஞ்சால் சிறுநீரக கற்கள் ஏற்பட்டமை காரணமாக மேற்படி நாய்கள் பலியாகியுள்ளதாக அப்பல்கலைக்கழகத்தின் விலங்கு வைத்திய நிபுணர் ஷாங் வென்கி தெரிவித்தார்.

இறந்த அனைத்து நாய்களும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மலைப்பாறைகளில் டைனோசர்களின் காலடித்தடங்கள் கண்டுபிடிப்பு

(அமெரிக்கா)

அமெரிக்காவின் அரிஸோனா -உதாஹ் மாநில எல்லையில் அதிசயிக்கத் தக்களவு டைனோஸர்களின் காலடித் தடங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.



மேற் படி டைனோஸர்களது 1000க்கும். அதிகமான காலடித் தடங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடம் டைனோஸர் நடனத் தளம் என செல்லமாக பெயரிடப் பட்டுள்ளது.

வெர்மிலிய் மலையுச்சிகளுக்கு இடையில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த காலடித் தடங்கள் 190 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என கணிப்பிடப் பட்டுள்ளது.

இந்தக் காலடித் தடங்களை அவதானிக்கும் போது இள வயதினர் நடனமாடியது போன்று காணப்படுவதாக இந்த ஆய்வில் பங்கேற்ற பேராசிரியர் மார்ஜோரி சான் தெரிவித்தார்.

இந்த டைனோஸர்கள் ஏனைய டைனோசர்களைக் கவர நடனமொன்றை ஆடியிருக்கலாம் எனக் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் 2.5 சென்ரீமீற்றர் முதற் கொண்டு 50 சென்ரிமீற்றர் வரையான விட்டத்தைக் கொண்ட காலடித் தடங்கள் தாய் டைனோஸருடன் டைனோஸர் குட்டிகள் சென்றமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளதென இந்த ஆய்வுத் திட்டத்தில் பணியாற்றிய வின்ஸ்டன் ஸெய்லர் கூறினார்.

டைனோஸர்களின் காலடித்தடங்களுடன் சுமார் 7மீற்றர் நீளமான வால்களின் அடையாளங்களும் அப் பிரதேசத்தில் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஓ)

# புலிகளை தோற்கடிப்பது தமிழரின் அபிலாஷைகளுக்கு தீர்வாக அமையாது

## ஐக்கிய சோசலிச கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்தரீதியில் தோற்கடிப்பது தமிழர் அபிலாஷைகளுக்குத் தீர்வாக அமையாதென ஐக்கிய சோசலிச கட்சியின் செயலாளர் சிரிதுங்கா ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் தொடர்பில் மெய்யான அக்கறை இருந்தால் இந்தியா வழங்கிவரும் இராணுவ உதவிகளை நிறுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜயசூரியா பங்களூரில் வைத்து இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிப்பதனை நிறுத்தி இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என அவர் தெரிவித் துள்ளார்.

வெறுமனே சிலர் பதவி விலகல் கடிதங்களை சமர்ப்பிப் பதன் மூலம் எவ்வித நன்மையும் கிட்டப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் பிரதேசங்களை கைப்பற்றுவதன் மூலம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் நிரந்தரத் தீர்வு எட்டப்பட முடியாதென அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

குறைந்த பட்சம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலாவது தமிழர் பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட முனைப்புக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். (ஓ)

# ஊடக சுதந்திரம் மறுக்கப்படும் போது ஜனநாயகம் ஆட்டம் காணுகின்றது

## சர்வதேச ஊடக மாநாட்டில் ரணில் விக்கரமசிங்க

(கொழும்பு)

ஜனநாயகவாத அரசாங்கத்திற்கும் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே இருக் கின்ற அடிப்படை வேறுபாடுகள் மற்றும் அதன் நடவடிக்கைகளின் உண்மைத் தன் மைகளை வெளிப்படுத்தும் சுதந் திரம் ஊடகத்துக்கும் ஊடக வியலா ளருக்கும் இருக்க வேண்டும்.

அந்த சுதந்திரம்மறுக்கப்படும் போதுதான் ஜனநாய கத்துக்கு அத்திபாரம் ஆட் டம் காணுகின்றது என எதிர்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரி வித்தார்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்நாட்டில் அரச தரப் புத்தகவல்களும் ஊடகத் தக வல்களும் வித்தியாசமானதாக அமைந்து விட்டால் குறித்த ஊடக வியலாளருக்கு பின்னால் வெள்ளை வான் ஏவி விடப்படுகின்றதுடன் அச்சுறுத்தல்படுகொலை போன்ற பயங்கரம் துரத்திக்கொண்டிருக்கின்றது என்றும்அவர் கூறினார்.

ஊடக சுதந்திரம்சமூக பொறுப்புணர்வு தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் யுனெஸ்கோவின் அனுசரணையுடனான சர்வதேச ஊடக மாநாடு தற்போது நடைபெற்று வருகின்றது.

இதன் ஆரம்பநிகழ்வு திங்கட் கிழமை மாலை 5மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சிறப்பதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்பேசுகையில்,

ஊடகசுதந்திரம் சமூக பொறுப்புணர்வு தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் 10 ஆண்டு நிறைவை எட்டியிருக்கும் இந் நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் ஊடக சுதந்திரம் என்பது வெறும் வாய்ப் பேச்சாகவே இருக்கின்றது . கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் ஊடகங்களுக்கான சுதந்திர த்தன்மை அற்றுப் போய்க் கிடப்பதும் ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்களும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன. உண்மைத் தன் மையை வெளிப்படுத்தவும் அதே நேரம் நாட்டு நிலைமைகளைதெரிந்து கொள்வதற்கான உரிமைகளும் மறுக்கப் பட்டு வருகின்றன. அச்சகங்கள் தீயூட்டப்படுகின்றன. ஊடக நிறுவனங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

இந் நிலையில் நாட்டுக்கு அதிகளவு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ள மிஹின்எயார் குறித்து பேசினால்



அல்லது விமர்சிக்கப்பட்டால் அரசாங்கத்திடம் இருந்து எதிர்க்கணைகள் வீசப்படுகின்றன.

அத்துடன் தேசத்துரோகி என்ற பட்டமும் சூட்டப்படுகின்றது. ஈராக்கின் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தியது தனது இராணுவ நடவடிக்கைபடு வேகமாக முன்னெடுத்தது இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஊடகங்கள் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் அதன் இழப்புகள் குறித்தும் விமர்சித்தன அப்படி விமர்சிப்பதற்கானமுழு சுதந்திரமும் அமெரிக்காவில் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறுயுத்த கள நிலைமைகள் விமர்சிக்கப்படும் போதும் ஆய் வுக்குட்படுத்தும் போதும் அதனை ஆக்கபூர்வமான முறையில் மீள் நிரப்புவதற்கு அல்லது திருத் திக் கொள்வதற்கு வழிசமைக்கப் படு கின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அப்படி இல்லை அனைத்தும் தலை கீழாக நடைபெறுகின்றது. இங்கு நடை பெற்றுக் கொண்டிருக்கும் யுத்த நிலைவரங்கள் ஊடகங்களிலும் மற்றும் பல அமைப்புக்களாலும் ஆய்வு செய்யப்பட்டு வெளியிடப்படும் பட்சத்தில் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்துவதாக கூறப்படுகின்றது.

இதன் பின்னர் ஊடகங்களின் பின்னாலோ அல்லது ஊடகவியலாளர் களது பின்னாலோ வெள்ளைவான் ஏவி விடப்படுகின்றது. அச்சுறுத்தல், தாக்குதல், படு கொலை செய்தல் போன்ற சகல பயங்கரங்களும் இடம் பெறுகின்றன.

இதனால் இலங்கையின் ஊடகவியலாளர்கள் மனவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். உண்மைத் தகவல்களை வெளியிடுவதற்கு அஞ்சி நிற்கின்றனர்.

இதற்கு மூலகாரணமான சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படாமை ஊடக சுதந்திரத்தை பெரிதும் பாதித்துள்ளது என்றார். (ஓ-6)


## திருமறைக் கலாமன்றம் -இலக்கிய அவை வழங்கும்

# 'விவாதத் தமிழ் - 2008'

## 'தமிழுக்கோர் பெருவிழா'

### விவாதப் போட்டிகளுக்கான விதிகள்

*போட்டியாளர்கள்*

1. ஒரு பாடசாலையிலிருந்து ஓர் அணியே பங்குபற்ற முடியும். ஒரு அணியில் அணித்தலைவர் உட்பட 3 விவாதிகள் இடம்பெறுவர்.
2. ஒவ்வொரு விவாத அணியும் ஒரு பொறுப்பாசிரியரையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
3. பாடசாலையில் கல்வி பயிலுகின்ற மாணவர்களே பங்குபற்ற முடியும். பங்குபற்றும் மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

*போட்டிமுறை*

4. போட்டிகள் யாவும் விலகல் முறையிலேயே நடைபெறும்.
5. போட்டி ஆரம்பமாவதற்கு 20 நிமிடங்கள் முன்பதாக தலைப்பு வழங்கப்படும். போட்டியின் போது தலைமை விவாதிக்கு 5நிமிடங்களும் ஏனைய விவாதிகளுக்கு 4 நிமிடங்களும் தொகுப்புரைக்கு 4 நிமிடங்களும் வழங்கப்படும்.
6. போட்டிகளின் போது போட்டியாளர்கள் பாடசாலைச் சீருடையில் பங்குபற்ற எதிர்பார்க்கப் படுகின்றீர்கள்.

*பரிசுகள்*

7. முதலிடத்தைப் பெறும் அணிக்கு "விவாதத் தமிழ்-2008" வெற்றிக் கிண்ணமும் பதக்கங்களும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அணியினருக்கு வெற்றிக் கிண்ணமும் பதக்கங்களும் வழங்கப்படும்.
8. பங்குபற்றும் அத்தனை போட்டியாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதோடு ஒவ்வொரு அணியிலிருந்தும் சிறந்த விவாதி தெரிவு செய்யப்படுவார்.
9. போட்டிகளின் இறுதியில் அனைத்து விவாதிகளிலுமிருந்து சிறந்த தலைமை விவாதி (1ஆம் விவாதி), சிறந்த கருத்துரை விவாதி (2ஆம் விவாதி), சிறந்த எதிர்விவாதி(3ஆம் விவாதி) தெரிவு செய்யப்படுவர்.

▸ ***விவாதப் பேச்சு***

ஒரு பாடசாலையிலிருந்து ஒருவர் மாத்திரமே பங்குபற்ற முடியும். வழங்கப்படும் தலைப்பில் விவாதப் பேச்சை முன்வைத்தல் வேண்டும். போட்டி ஆரம்பமாவதற்கு 10 நிமிடத்தின் முன்னர் தலைப்பு வழங்கப்படும். பேச்சு நேரம் 5 நிமிடங்கள்.

▸ ***கவிதை ஆக்கம்***- போட்டியின் போது வழங்கப்படும் தலைப்பில் 15-20 வரிகளுக்குட்பட்டதாக கவிதையைப் படைத்தல் வேண்டும். போட்டிக்கான நேரம் 45 நிமிடம்.

▸ ***கட்டுரை ஆக்கம்***- வழங்கப்படும் தலைப்பில் 350-400 சொற்கள் வரையறைக்குள் கட்டுரையை ஆக்குதல் வேண்டும். போட்டிக்கான நேரம் 1 மணி.

▸ ***இலக்கியத் திறனாய்வு, விமர்சன ஆக்கம்***- போட்டியின் வழங்கப்படும் இலக்கிய படைப்பொன்றினை விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்தல். போட்டிக்கான நேரம் 3மணி.

***ஏனைய குறிப்புக்கள்***

◆ விண்ணப்ப முடிவுத்திகதி 24.10.2008 ஆகும்.

◆ விண்ணப்பங்களை: "விவாதத் தமிழ்-2008",
இலக்கிய அவை,
திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது 021-222 2393 என்ற தொலைநகலுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

◆ போட்டிகள் நடைபெறும் தினங்கள் பின்வருமாறு;
**விவாதப் போட்டி: 6,7-11.2008**
**விவாதப் பேச்சு ,கட்டுரை, இலக்கியத் திறனாய்வு:-6-11.2008**
**கவிதை:-7.11.2008**

◆ குறித்த தினங்களில் காலை 8.30 மணிக்குப் கலைத்தூது கலையகத்தில் போட்டிகள் ஆரம்பமாகும்.

◆ ஆக்கப் போட்டிகளுள் ஒருவர் ஒரு போட்டியில் மாத்திரமே பங்குபற்ற முடியும். ஒரு பாடசாலையில் இருந்து எத்தனை போட்டியாளர்களும் பங்குபற்றலாம். அத்துடன் விவாதப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் விவாதப் பேச்சில் பங்குபற்ற முடியாது.

◆ விவாதப் பேச்சு மற்றும்,ஆக்கப் போட்டிகளுக்கு முதல் 5 இடங்கள் பரிசுகள் வழங்கப்படும். மேலும் ஆக்கப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் தரமான படைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

◆ மேலதிக விபரங்கள் ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படும்.

***குறிப்பு:-01.11.2008 அன்று நடைபெறவிருந்த போட்டிகள் பல பாடசாலைகளின் வேண்டுகைக்கிணங்க மாணவர்களின் நலன் கருதி 6ஆம் 7ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளன.***

செயலாளர்
இலக்கிய அவை
திருமறைக்கலாமன்றம்

(இ-103)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

# வெளிவாரிப் பரீட்சைகள் -2007

**01.கலைமாணி பகுதி -I -2005 & 2006**
**02.சிறப்புக்கலைமாணி பகுதி -I -2005 & 2006**

மேற்படி பரீட்சைகளை 15.11.2008 (சனிக்கிழமை) தொடக்கம் 29.11.2008 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் வவுனியா வளாகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.11.2008(திங்கள் கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

*பதில் பதிவாளர்*
*20.11.2008*

(சி-1707)

அளவுக்கு மீறிய தற்செருக்குதான் உண்மையில் அவர்களின் தவறான செயல்கள் அனைத்துக்கும் மூலகாரணமாக இருக்கின்றது.

~ பிளேட்டோ

வலம்புரி

## நாராயணனை நடக்கவிட்டு பாடம் புகட்டிய இலங்கையிடம் இந்தியா இன்னும் பல தடவை ஏமாறும்

இந்தியாவின் அழுத்தத்துக்கு இலங்கை ஒருபோதும் அடிபணியப்போவதில்லை என அரசு கூறியுள்ளது.

அப்படியானால் யுத்தம் தொடரும் என்பதே அதன்பொருள். இதுவிடயத்தில் இலங்கை அரசை பாராட்டவேண்டும்.

ஆயுத உதவி, இராணுவப் பயிற்சி, யுத்தவிமானங்களுக்கான ஓட்டிகள் என பல்வகை உதவிகளையும் இந்தியாவிடம் இருந்து வெற்றுவிட்டு நெற்றிமுட்ட அடித்தால்போல் இந்தியாவின் அழுத்தத்துக்கு இலங்கை அரசு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என கூறியிருப்பது பாராட்டப்பட வேண்டியதே.

ஏனெனில் இலங்கை விடயத்தில் இந்தியா பல தடவைகள் ஏமாற்றப்பட்டுள்ளது. ஏமாந்துபோயுள்ளது. இருந்தும் அந்த நாடு படித்துக் கொள்வதாக இல்லை. இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிடமும் இலங்கை ஆயுதங்களை கொள்வனவு செய்யக் கூடாது என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் கூறியிருந்தார்.

இதனால் இலங்கையில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் நாடாளுமன்றத்தில் தம் மூதாதையரான சிங்கத்தை நினைவுபடுத்தும் வகையில் சீற்றம் கொண்டனர்.

அதேநேரம் நாராயணனின் அறிவுறுத்தலுக்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டாத இலங்கை அரசு தான் நினைத்தாற்போல் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளில் தனக்குத் தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்கிறது.

இதனைக் கண்டும் பேசாமல் இருக்கும் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் இலங்கை, இந்தியாவிடமே ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை கூறாமல் இருந்திருக்கலாம். அவ்வாறு கூறினால் அதற்கேற்றால்போல் நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

ஆனால் இந்தியா நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிடமும் இலங்கை ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளக் கூடாதென கூறிய நாராயணனிற்கு இலங்கை அரசு பாடம் புகட்டியது.

இலங்கை வந்திருந்த நாராயணனுக்கு காரில் செல்வதற்கான ஏற்பாடு செய்யாமல் கால்கடுக்க நடக்கவிட்டு தண்டனை கொடுத்தது.

நாராயணனும் நல்லகாலம் முழந்தாளில் இருக்கவிடாமல் காப்பாற்றியது அந்த நாராயணன் தான் என நினைத்துக் கொண்டு இந்தியாவுக்கு ஓடித்தப்பினார்.

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு அணிவகுப்பு மரியாதையில் வைத்து அடிகொடுத்து அனுப்பிய இலங்கை அரசுக்கு நாராயணனை நடக்க வைப்பதில் பெரிதான மன இடைஞ்சல் ஏதும் இருக்காது.

ஆகராஜீவ்காந்திக்கு அடி,நாராயணனுக்கு நடக்கும்படியான தண்டனை என இலங்கை அரசு இந்தியாவைத் தாக்கிக் கொண்டே இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக இப்போது இந்தியாவின் அழுத்தத்துக்கு இலங்கை அடிபணியாது என வெளிப்படையாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்புக் குறித்து இந்தியா எதுவுமே செய்ய முடியாது. ஏனெனில் இலங்கை அரசு முன்னெடுக்கும் யுத்தத்தின் பின்னணியே இந்தியாதான்.

அதனால்தான் இலங்கையில் தமிழருக்கு எதிராக இடம்பெறும் யுத்தத்திற்கு இந்திய மத்திய அரசே மௌனசாட்சி என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியிருந்தார். அவரின் கூற்றுக்கான அர்த்தமென்ன?

இந்திய மத்திய அரசுதான் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தின் பின்னணி. எனவே யுத்தத்துக்கு உதவிய –யுத்தத்தை நடத்துமாறு ஆலோசனை கூறிய இந்தியாவை இலங்கை எவ்வளவு அதட்டினாலும் அந்த நாடு மௌனமாக இருப்பதைத் தவிர வேறு எதைத்தான் செய்ய முடியும்?

# இந்தியா வன்னி மக்களுக்கு குரல் கொடுப்பதாக கூறிக்கொண்டு புலிகளையே பாதுகாக்கின்றது

## பாராளுமன்றில் விமல் வீரவன்ச எம்.பி.

(கொழும்பு)

தமிழ் நாடு மற்றும் புதுடில்லி அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதன் மூலமாக புலிகளை தோற்கடிக்கும் யுத்தத்தை நிறுத்துமாறு சொல்லாமல் சொல்லுகின்றனர். என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச சபையில் தெரிவித்தார்.



வன்னியில் வாழும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு முதலைக் கண்ணீர் வடிப்பதற்கு முன்னர் இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான தமிழ் மக்களின் கஷ்டங்கள் தொடர்பாக கண்ணீர் வடிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதான நடவடிக்கை நிறைவடைந்ததன் பின்னர் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் டில்லி அரசாங்கம் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. வடக்கில் படையினர் முன்னெடுக்கின்ற நடவடிக்கையை நிறுத்தும் வகையிலான அழுத்தங்களையே அரசாங்கத்தின் மீதுதிணிக்கின்றது. வன்னியிலுள்ள தமிழ் மக்களுக்காகவே இந்தியா குரல் கொடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும் புலிகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொள்ளப்படுகின்றது அரசாங்கத்திற்கு கிடைத்த மக்கள் ஆணையின் பிரகாரமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமேதவிர உள்ளூர் வெளியூர் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடாது.

மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலேயே பயங்கரவாதத்தை முழுமையாக தோற்கடிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. டில்லி வோஷிங்டன் அழுத்தங்களுக்கு அடிபணிந்து யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளக்கூடாது. மனித உரிமை , ஜி.எஸ்.பி.பிளஸ் ஆகியவற்றை முன்வைத்து அரசியல் தீர்வை பலவந்தமாக திணிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மன்மோகன்சிங் இந்திய வாக்காளர்களினால் தெரிவு செய்யப்பட்டவரே தவிர இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர். புது டில்லி அரசாங்கம் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது என்பதனால் தான் தமிழக அரசாங்கத்தின் முதலைக்கண்ணீருக்கு தலை வணங்கிசெயற்படுகின்றது. கிழக்கு மாகாண மக்கள் அனுபவிக்கின்றதை வடக்கு மாகாண மக்கள் அனுபவிக்கக்கூடாது என்பதிலேயே இந்தியா கவனம் செலுத்துகின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு முன்னர் பொதுமக்களை மனிதக்கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற புலிகளுக்கு இந்தியா அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

பயங்கரவாதிகள் இறுதி மூச்சு விடுவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நிலையில் மக்கள் ஆணைக்கு எதிராக செயற்படமாட்டோம் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். (ஓ-6)

# பொய்ப்பிரசாரங்களின் எதிர் ஒலியே இலங்கைப் பிரச்சினையில் தமிழகத்தின் கிளர்ச்சிக்கும் மத்திய அரசின் அழுத்தத்திற்கும் காரணம்

## ஐ.தே.க.எம்.பி. பாலித்த ரங்கே பண்டார

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அலரிமாளிகைத் தகவல்களும் இராணுவத் தளபதியின் கருத்துக்களும் நம்பகத்தன்மைக்கு முரணானவையாகும். பொய்ப் பிரசாரங்களின் எதிரொலியே இலங்கைப் பிரச்சினையில் தமிழகத்தின் கிளர்ச்சியும் இந்தியாவின் தலையீடும் அதிகரித்தமைக்கு காரணமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட எம்.பி. பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

மேற்கத்தேய நாடுகளைச் சுற்றிக் கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கு அண்டை நாடான இந்தியாவுக்கு சென்று இலங்கையின் நிலைவரத்தை தெளிவுபடுத்த நேரமில்லாது போனது பரிகாசத்துக்குரியதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பாலித ரங்கே பண்டார எம். பி இங்கு அவர் மேலும் கூறுகையில், 1992 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தின் போது அதன் பின்னர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தின் போதும் வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் பாரிய யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

அந்த சந்தர்ப்பங்களில் யுத்தகள நிலைவரத்தகவல்கள் உண்மைத் தன்மையை கொண்டிருந்தன. ஆனால், கூட்டமைப்பு அரசாங்கத்தின் இன்றைய யுத்த நடவடிக்கைகள் இலங்கையை மட்டுமல்ல இந்தியாவையும் சந்தேகத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் மாத்திரம் 24 ஆயிரம் புலிகளை கொன்று அழித்திருப்பதாக அலரிமாளிகையும் அரச ஆதரவு ஊடகங்களும் தகவல்கள் வெளியிட்டு இருக்கின்றன.

இதனை மெருகூட்டும் வகையில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க ஆகியோரது கைகளில் அலரிமாளிகைத் தகவல்கள் திணிக்கப்பட்டு அதற்கேற்றால் போல் அவர்களும் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், இராணுவத் தளபதியின் அண்மைய கருத்துக்களின் அடிப்படையில் 11 ஆயிரம் விடுதலைப் புலிகளை கொன்றொழித்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார்.

இங்கு அலரிமாளிகைத் தகவல்களும் இராணுவத் தளபதியின் கருத்துக்களும் முன்னுக்குப்பின் முரணானவையாக இருக்கின்றன. இராணுவத் தளபதியின் கூற்றுப்படி நோக்கும் போது 11 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டிருப்பின் மிகுதி 13 ஆயிரம் பேர் பொதுமக்களா என்ற சந்தேகமும் கேள்வியும் எழுந்திருக்கின்றது.

அப்படியானால் 24 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டு விட்டதான அலரிமாளிகையின் மற்றும் அரச ஊடகங்களின் செய்திகள் மக்களை ஏமாற்றுகின்ற பொய்ப் பிரசாரமேயன்றி வேறெதுவும் இல்லை. இன்றைய அரசாங்கத் திற்கு சிறந்த அணுகுமுறைகள் இல்லை. பொது மக்களைப் பாதுகாப் பதற்கான திட்டங்கள் இல்லை. நாட்டின் உண்மை நிலைவரங்கள் மூடி மறைக்கப்பட்டு பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் விளைவுதான் இலங்கை மீதான இந்தியாவின் அழுத்தங்களுக்கு காரணமாகும் என்றார். (ஓ)

# அன்பே அருளாட்சி-பகவான் பாபா

பாதணி திருத்தும் ஒரு ஏழைத் தொழிலாளி பகவான் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தான். ஒருமுறை சத்திய சாயி பாபாவை தரிசிக்கும் பொருட்டு புட்டபர்த்திக்கு பயணமானான். போகும் போது ஒரு ரோஜா பூவொன்றை பகவானுக்கு பரிசளிப்பதற்கு எடுத்துச் சென்றான். அப்போது பகவான் பெரும் சனக்கூட்டத்தின் மத்தியிலிருந்தார். இவனோ சனக்கூட்டத்தினூடாக சென்ற போது பகவானை நோக்கினான். அவனிடம் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தது. அதே நேரம் பகவான் அவனைப் பார்த்து தன்னருகே வருமாறு கையசைத்தார். அருகே சென்ற அத்தொழிலாளி தனது கையிலிருந்த ரோஜா மலரை பகவானிடம் அர்ப்பணித்தான். அதனைப் பெற்ற சுவாமி, “அன்பே உனக்கு என்ன வேண்டும்” என தமிழில் கேட்டார். அவனது தாய் மொழி தமிழ். பகவான் இவ்வாறு கேட்டார் என எதிர்பார்க்காத அவன் ஒன்றுமே சொல்லத் தெரியாமல், “சுவாமி எனது குடிசைக்கு வரவேண்டும்” என்றான். “கட்டாயம் வருவேன்” என்றார் சுவாமி. எப்போது வருவீர்கள் என கேட்க அவன் மறந்து விட்டான்.

வீடு திரும்பும் போதுதான் தான் சுவாமியை எப்போது வருவீர்கள் எனக் கேட்க மறந்தது நினைவு வந்தது. நாட்கள் கழிந்தது. சுவாமி வரவில்லை. ஒரு நாள் பழைய செருப்புக்களை திருத்திக் கொண்டிருந்த போதே தெருவில் ஒரு கார் வந்து அவன் முன் நின்றது. பொலிஸார் தன்னை அப்புறப்படுத்துவதற்கே வந்துள்ளார்கள் என நினைத்து தன் பொருட்களுடன் ஓட முற்பட்டான். அப்போது பகவான் காரில் இருந்து இறங்கி பயப்படாதே என்னுடன் காரில் வா என்று கூறி அவனது குடிசையை நோக்கிப் பயணமானார். அவனும் அதிர்ச்சியுடன் சென்றான்.




குடிசையை அடைந்ததும் உள்ளே ஓடிச் சென்று சுவாமி அமர்வதற்கு விரிப்பொன்றை தயார் செய்யுமாறு கூறிவிட்டு மீண் டும் சுவாமியை வரவேற்க ஓடிச் சென்றான். பகவான் சாயி பெருங் கருணைக்கடல். அன்புடன் குடிசைக்குள் நுழைந்து அமர்ந்து கொண்டார். ஆனால் குடிசைக்குள் சுவாமிக்கு கொடுப்பதற்கு ஒன்றுமே இருக்கவில்லை. அவன் வேதனைப்பட்ட வண்ணமிருந்தான். சுவாமி. அவனைப் பார்த்து நான் அன்பைத் தவிர வேறொன்றையும் பெற்றுக் கொள்ளவரவில்லை. உனக்கு தரவே வந்துள்ளேன் எனக் கூறி கையை அசைத்து இனிப்புப் பண்டங்களையும், பழங்களையும் வருவித்து அங்கிருந்த எல்லோருக்கும் வழங்கினார். அவனிடம், “இங்கிருந்து நான் சென்றாலும் உன்னுடனேயே இருப்பேன்” எனக் கூறி விடைபெற்றார். சுவாமி அவனது குடிசையைக் கோவிலாக மாற்றி விட்டார்.

ஜெய்சாயிராம்

யாதவன்

# நிலவிற்கு ஆளில்லா செயற்கைக்கோள்; இந்தியாவின் முதல் முயற்சி 'சந்திராயன்-1'



(சென்னை)

உலகே வியக்கும் வகையில் சந்திராயன்-1 செயற்கைக்கோளை இந்தியா வெற்றிகரமாக விண்ணுக்கு அனுப்பி உள்ளது.

புதன்கிழமை காலை இந்தியா சரியாக 6.20 மணிக்கு சந்திராயன் -1 செயற்கைக் கோளை ஏந்திய பி.எஸ்.எல். வி ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திலிருந்து விண்ணை நோக்கிப் பாய்ந்தது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் கூறுகையில், நிலவை நோக்கி குறிப்பிடத்தக்க பயணத்தை தொடங்க இருக்கிறோம். இன்னும் 15 நாளில் அந்தப் பயணம் இறுதிக் கட்டத்தை எட்டும் வரலாற்றுப் புகழ் பெற்ற இந்தசாதனை வெற்றிகரமாக துவங்கியுள்ளது என்றார்.

நிலவிற்கு ஆளில்லா செயற்கைக் கோள் அனுப்பும் இந்தியாவின் முதல் முயற்சியான சந்திரயான்-1 திட்டத்தின் " கவுண்ட் -டவுண்ட் " ஸ்ரீஹரி கோட்டாவில் 20ஆம் திகதி காலை துவங்கியது.

40மணிநேர " கவுண்ட் -டவுண்ட்" பிறகு திட்டமிட்ட படி நேற்றுக்காலை 6.20மணிக்கு சந்திராயன் -01 செயற்கைக் கோளை தாங்கியவாறு பி.எஸ்.எல்.வி.சி-11 ரக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதையடுத்து ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள விஞ்ஞானிகள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

**சந்திராயன் திட்டத்தின் தலைமைப் பொறுப்பில் தமிழன்**

இது இந்திய விண்வெளி வரலாற்றில் ஒரு புதிய மைல்கல் ஆகும். மொத்தம் 386 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சந்திரனை ஆராயும் வல்லமை சில நாடுகளுக்கே உள்ளன. ஆனால் தற்போது இந்தியாவும் இந்த வரிசையில் இடம்பிடித்திருப்பது உலக அரங்கில் பெருமை ஆகும்.

கடந்த 1970-80 களில் றொக்கெட் திட்டத்திற்கு தமிழரான அப்துல்கலாம் தலைமை வகித்தது போல் தற்போதைய சந்திராயன் திட்டத்திற்கு தமிழர் மயில்சாமி அண்ணாத்துரை தலைமைப் பொறுப்பு வகித்துள்ளார் என்பது கூடுதல் மகிழ்ச்சிதரும் விஷயம் ஆகும். நூறுகிலோ மீற்றருக்கு அப்பால் சந்திரனை சுற்றி வந்து தகவல்களை சேகரிக்கும்.

அங்கு இருந்து தரை நிலையத்திற்கு தகவல் அனுப்பிவைக்கும். மூன் இம்பாக்ட் பிராப் எனும் சிறு கருவியை நிலவின் தரைப் பகுதிக்கு சந்திராயன் அனுப்பும். அப்போது சிறிய அளவிலானதேசியக் கொடி, சந்திரனில் இறக்கப்படும்.

சந்திரனில் உள்ள தாதுப் பொருட்கள் மற்றும் சூரியன் தோன்றிய வர லாறு ஆகியவற்றை ஆராயும். இந்த முயற்சி யால் இந்தியாவுக்கு விண்ணில் ஒரு பெருமை கிடைக்கிறது. (ஓ-5)

பாரதச் செய்திகள்

# கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக்காக ஆட்சியைத் துறக்க தயங்கக் கூடாது

## -மதுரை ஆதீனம் தெரிவிப்பு

இலங்கை தமிழர்களுக்காக தனது ஆட்சியை துறக்கவும் முதல்வர் கருணாநிதி தயங்கக்கூடாது என்று மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். திருவாரூரில் மதுரை ஆதீனம் நேற்று, முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,


இலங்கையில் தமிழ் இனப் படுகொலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு இம்மாதம் 28 ஆம் திகதிக்குள் உரிய நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் தமிழக முதல்வர் கருணாநிதி தனது பதவியை துறக்கவேண்டும். தமிழகத்தில் நடைபெற்றுவரும் ஆட்சியை துறந்தால் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வு ஏற்படும் என மத்திய அரசும் இலங்கை அரசும் கருதினால் அதற்கும் தமிழக முதல்வர் கருணாநிதி தயாராக இருக்கவேண்டும்.

ஈழத்தில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் உணவுப்பொருட்கள், மருந்துகள் கொண்டு செல்லத் தடை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள திருகோணமலை, திருகேதீஸ்வரம் ஆகிய கோயில்களுக்குக் கூட செல்வதற்கு தமிழர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அங்கு தமிழர்கள் தெய்வத்தை கும்பிடுவதற்குக் கூட தடை செய்யப்பட்டுள்ளது. ஒருநாட்டில் இனப் படுகொலை நடைபெறுவதை தடுக்க மனிதாபிமான அடிப்படையில் தான் பொதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர இதில் சாதி, மத, அரசியல் வேறுபாடுகளை காட்டக்கூடாது.

இலங்கைக்கு மத்திய அரசு இராணுவ ஆயுத உதவிகள் செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும். மத்திய அரசு இலங்கை இராணுவத்திற்கு போர் பயிற்சி அளிக்கக் கூடாது. இந்தியா முழுவதும் பயங்கரவாதம் , தீவிரவாதம் தலைவிரித்தாடுகிறது. இதனால் அமைதியின்மை நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. இதனை சரிசெய்ய மத்திய மாநில அரசுகள் மத நல்லிணக்கத்திற்கென ஒரு துறையை ஏற்படுத்தி அதற்கு தனியாக ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டும். இதில் அமைச்சராக நியமிக்கப்படுபவர் நாட்டில் உள்ள அனைத்து மதத்தின் நல்லொழுக்கங்களை நன்கு அறிந்தவராக தெரிந்து அந்தப் பதவியில் நியமிக்கப்படவேண்டும் . இதனை மத்திய மாநில அரசுகள் உடனடியாக மேற்கொண்டால் நாட்டில் அமைதி நிலவும். இவ்வாறு மதுரை ஆதீனம் கூறினார். (ஓ)

# சீக்கியனை மட்டும் மன்னிப்பீர்கள் தமிழனை மட்டும் தண்டிப்பீர்களா?

## இயக்குநர் பாரதிராஜா கேள்வி



மகாத்மாகாந்தியை கொன்றதற்காக கோட்சே இனத்தை அழித்தீர்களா? முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியைச் சுட்டுக் கொன்றது சீக்கியர் என்பதற்காக அந்த இனத்தையே அழித்துவிட்டீர்களா என்று இயக்குநர் இமயம் பாரதிராஜா கேள்வியெழுப்பியுள்ளார். தமிழகத்திலிருந்து வாரம் இருமுறை வரும் ஜுனியர் விகடனுக்கு பாரதி ராஜா வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகள்,

**"இராமேஸ்வரம் போராட்டம் எப்படி இருந்தது?"**

"இதுவரை நடிகர்கள் கலந்துகொண்ட நெய்வேலி போராட்டமாகட்டும், ஒகேனக்கல் போராட்டமாக இருக்கட்டும், காவேரிக்கான போராட்டமாக இருக்கட்டும்... அந்தப் பிரச்சினைகளின் உள்ளார்ந்த அர்த்தத்தையே புரிந்துகொள்ளாமல், தமிழ் மக்கள் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறோமே என்ற உணர்வில் வெறும் ஷோ காட்டும் நிகழ்ச்சியாகத்தான் இதுவரை நடிகர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், இது உணர்வு ரீதியான போராட்டம். எந்த நடிகரையும், நடிகையையும் பார்க்கலாம் என்ற எதிர்பார்ப்பில் யாரும் இராமேஸ்வரத்துக்கு வரவில்லை. இன உணர்வால் மக்கள் திரண்டார்கள். எனவே, இது மற்ற போராட்டங்கள் போல அல்ல. ஆக இது அரிதாரம் பூசாத, முழுக்க முழுக்க ஓர் இனப்போராட்டமாகவே நடந்தது"

**"நடிகர் சங்கம் தனியாக உண்ணாவிரதம் இருந்து தங்கள் உணர்வுகளை வெளிப்படுத் தப்போவதாக அறிவித்திருக்கிறதே..?"**

"ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள்... இராமேஸ்வரத்தில் உணர்வு ரீதியாக நடக்கும் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றால் நம்முடைய சுயரூபம் தமிழ்மக்களிடையே அம்பலப்பட்டு விடும் என்ற அச்சம் நடிகர்களை ஆட்டிப்படைக்கிறது. அதேநேரம் வசதியாக போராட்டம் நடத்தவேண்டும் என்ற ஆசையும் அவர்களுக்கு இருக்கிறது.

அதனால் தான் வேறுவழியில்லாமல் தனியாகச் சென்னையில் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். நெய்வேலியில் போராட்டம் நடந்தபோதே எங்களுக்கு வசதியில்லை என்று குறைபட்டுக்கொண்டவர்கள் இவர்கள்.

அங்கே ஈழமண்ணில் அடக்கம் செய்யக் கூட ஆளில்லாமல் தமிழன் தினம் தினம் அநாதைப் பிணமாக குவிந்து கிடக்கிறான்.

அவனுக்காக போராட்டம் நடத்த இவர்களுக்கு சொகுசுகள் வேண்டுமா? நடந்த போராட்டம் ஒரு இழவு , துக்கம் விசாரிக்கும் ஒருநிகழ்வு. துக்கச்செய்தியைக் கேள்விப்பட்டு நாமாகத் தான் செல்லவேண்டும். மேலும் இது இன ஒற்றுமையைக் குலைக்கும் செயல். இத்தனை தூரம் சொகுசு வசதி பற்றியெல்லாம் பேசும் நடிகர், நடிகைகள் பணம் என்றவுடன் ஒரு பாட்டுக்காக ராஜஸ்தான் சென்று பாலைவனத்தில் குத்தாட்டம் போடுகிறார்கள். அங்கே என்ன வசதி செய்துகொடுக்கிறார்கள். ஆக பணம், சொகுதி வசதி வாய்ப்புக்களுக்கு முன்னால் உணர்வை சாகக் கொடுத்தவர்களிடம் எதை எதிர்பார்க்கமுடியும். குறிப்பாக உணர்வில்லாத தமிழ் நடிகைகளை நினைத்தால் ஆத்திரத்தில் மனசு ரொம்பவே வலிக்கிறது.

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ரஜனி, கமல் உங்களிடம் பேசினார்களா? எதுவும் பேசவில்லை. ஒருத்தரை உலகநாயகன் என்கிறார்கள். இன்னொருத்தரை சூப்பர் ஸ்டார் என்கிறார்கள். எம்.ஜி.ஆர். , சிவாஜிக்குப் பிறகு இவர்கள்தான் இருபெரும் திலகங்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். இவர்கள் சினிமா மார்க்கெட் உலக அளவில் உயர்ந்து சம்பளம் கோடிக்கணக்கில் கொட்டுவதற்குக் காரணம் பல நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் தான்.

இந்த உண்மையை அவர்கள் மறந்துவிட்டார்கள். போராட்டத்துக்கு வருவது வராதது இருக்கட்டும். இந்த அளவுக்கு உச்சத்தில் உயரவைத்து அழகு பார்க்கும் தமிழனின் தொப்புள் கொடி உறவான ஈழத் தமிழனுக்கு ஆதரவாக உன்னால் ஒரு அறிக்கை கூட வெளியிடமுடியவில்லையா? தமிழனின் உணர்வு புரியவில்லையா? ஆயிரக்கணக்கில் மன்றம் வைத்து நடத்தும் உனக்கு அவர்கள் மூலம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கிளர்ச்சி நடத்தமுடியாதா?"

**"சென்னையில் இளைஞர் அணி மாநாட்டை முடித்துவிட்டு மறுநாள் விஜயகாந்த் இரா மேஸ்வரம் போராட்டத்தில் கலந்துகொள்வார் என செய்திகள் அடிபட்டதே?**

வந்திருக்கவேண்டும். ஆனால் வரவில்லையே விஜயகாந்த் பிறப்பால் தமிழன் அல்ல. வளர்ப்புத் தமிழன். உனக்கு உண்மையிலேயே தமிழ் உணர்வு இருந்தால் மாநாட்டை முடித்துவிட்டு மறுநாள் விமானம் ஏறி இராமேஸ்வரம் வந்திருப்பாய். அங்கு வந்து நான் அரசியல் வாதியாக வரவில்லை. கட்சித் தலைவனாக வரவில்லை. தமிழன் என்ற முறையில் வந்திருக்கிறேன். என நீ சொல்லியிருப்பாயானால் உன்னை மேடையேற்றிப் பேச வைத்து கைதட்டி அழகு பார்த்திருப்பேன். ஆனா நீயோ வளர்ப்புத் தமிழன் கூட இல்லை என்பதை நிரூபித்துவிட்டாய்.

**ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளிக்கிறோம் என்ற பெயரில் ராஜீவ்காந்தி கொலையைக் கொச்சைப்படுத்தி இராமேஸ்வரத்தில் பேசிய தாக இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோருக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு கண்டனம் தெரிவித்திருக்கிறாரே?**


அவர்கள் பேசியதில் என்ன தவறு? தேசியம் பேசுகிற தங்கபாலுவைக் கேட்கிறேன். மகாத்மாகாந்தியைக் கொன்றதற்காக கோட்சே இனத்தையே அழித்தீர்களா? முன் னாள் பிரதமர் இந்திராகாந்தியை சுட்டுக் கொன்றது சீக்கியர் என்பதற்காக அந்த இனத்தையே அழித்துவிட்டீர்களா? சீக்கியரும் உணர்ச்சி வசப்பட்டான். தமிழனும் உணர்ச்சி வசப்பட்டான். சீக்கியனை மட்டும் மன்னிப்பீர்கள். தமிழனை மட்டும் தண்டிப்பீர்களா? என்றார் பாரதிராஜா.

# இவ்வளவு விரைவாக ஆஸி. சரணடையுமென நினைக்கவில்லை

## அணித்தலைவர் தோனி வியப்பு

(மொகாலி)

இவ்வளவு விரைவாக அவுஸ்திரேலிய அணி சரணடையும் என தான் நினைக்கவில்லை என இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி தெரிவித்துள்ளார்.




இது குறித்து மொகாலி டெஸ்ட் வெற்றிக்குப் பின்னர் இந்திய அணியின் தலைவர் தோனி கூறியதாவது,

உலக சம்பியன் அவுஸ்திரேலிய அணி இது போன்று சீக்கிரம் அடிபணிந்ததை நான் பார்த்ததில்லை.

அதாவது அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் ஒரு கட்டத்தில் 13 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 22 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது.

அப்போது நான், அவுஸ்திரேலிய அணி இதுபோன்று மோசமாக விளையாடுவதை நாம் அடிக்கடி பார்க்க முடியாது என்று ராகுல் ராவிட்டிடம் ஆச்சரியமாக கூறினேன்.

அவுஸ்திரேலிய அணி சில போட்டிகளில் மோசமாக விளையாடியுள்ளது. அதற்காக அவர்கள் பலமிழந்து போய்விட்டார்கள் என்று கருத முடியாது.

இன்னும் அவர்கள்தான் நம்பர் -01 அணி. திறமையான வீரர்களைக் கொண்ட அணி எனவே அவர்கள் சரிவிலிருந்து வலுவான அணியாக மீண்டு எழுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்த 2 டெஸ்ட் நல்ல போட்டியாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

**சகீர்கான் -கங்குலி**

இந்திய அணியில் 4 பந்துவீச்சாளர்களும் தங்கள் பணியை அற்புதமாக செய்தார்கள். சகீர்கான் தனது பந்துவீச்சில் தற்போது உச்சக்கட்ட போர்மில் இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

அவருக்கு எந்தக் காயமும் இல்லை. உயிரைக்கொடுத்து பந்துவீசுகிறார். 2-வது டெஸ்ட்டை எடுத்துக் கொண்டால் கங்குலி 7 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தது பசுமையான நினைவாக இருக்கும்.

ஏனெனில் அவருக்கு இதுவே கடைசி டெஸ்ட் தொடராகும். இதனால் அவர் நெருக்கடியின்றி சிறப்பாக ஆடுகிறார்.

இப்படி விளையாடுவதைத்தான் நாங்கள் விரும்புகின்றோம். இவ்வாறு தோனி கூறினார். (5)

# சரிவிலிருந்து மீண்டு வரும் திறமை எங்களிடமுள்ளது

## பொன்டிங் கூறுகிறார்

எங்கள் அணியில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. விரைவில் சரிவில் இருந்து மீண்டுவரும் திறமை எங்கள் வீரர்களிடம் உள்ளதாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.




அவுஸ்திரேலிய அணியின் மோசமான தோல்வி குறித்து ரிக்கி பொன்டிங் கூறியதாவது,

இந்திய வீரர்கள் அபாரமாகவும் ஆக்ரோஷமாகவும் விளையாடினார்கள். இந்த வெற்றிக்கு அவர்கள் தகுதியான அணி.

எதிரணி 460 ஓட்டங்கள் குவிக்கும்போது நாமும் அதே அளவுக்கு ஓட்டங்கள் எடுக்க வேண்டும். அதன் பின்னர் மேலும் சிறப்பாக செயற்படவேண்டும்.

ஆனால் நாங்கள் அவ்வாறு செயல்படவில்லை. எங்களது வேகப்பந்துவீச்சு, சுழற்பந்துவீச்சு, துடுப்பாட்டம் எதுவுமே எடுப்படவில்லை.

மொத்தத்தில் நாங்கள் போட்டியில் இருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டுவிட்டோம். இந்த டெஸ்டில் எங்களது மோசமான ஆட்டம் குறித்து விரிவாக அலசி ஆராய்வோம். தவறுகளைத் திருத்திக் கொண்டு அடுத்த போட்டியில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம்.

டெஸ்ட் தொடரில் நாங்கள் 0-1 என்ற கணக்கில் பின்தங்கியது கிடையாது. இதே போல் இவ்வளவு மோசமாக தோற்றதும் இல்லை.

எங்கள் அணி மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. சரிவிலிருந்து மீண்டு வரும் திறமை எங்களது வீரர்களிடம் உண்டு.

**பிரெட் லீயுடன் மோதலா?**


பிரெட்லிக்கும், எனக்கும் மோதல் ஏற்பட்டிருப்பதாக வெளியான தகவலில் உண்மையில்லை. சாதாரண விடயத்தை பெரிதுபடுத்த முயற்சிக்கிறார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி நன்றாக ஆடி ஓட்டங்கள் குவித்துக் கொண்டிருந்தது எனவே பந்தின் வேகத்தை குறைக்க வேண்டும் என்று எண்ணினேன்.

மேலும் எங்களது ஓவர் ரேட் 5 ஓவர்கள் குறைவாக இருந்தது. இதனால் சீக்கிரமாக பந்துவீசி முடிக்கவேண்டும் என்ற நிலை இருந்ததால் ஹசி போன்ற வேகம் குறைந்த பந்துவீச்சாளர்களை பயன்படுத்தினேன்.

அதனால்தான் பிரெட் லீயை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. இவ்வாறு பொன்டிங் கூறினார். (5)

# சகீர் கானுக்கு 80 சதவீத அபராதம்




(மொகாலி)

மொகாலி டெஸ்ட் போட்டியில் ஹைடனை அவமரியாதை செய்த விவகாரத்தில், இந்திய வீரர் சகீர் கானுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் போட்டி மொகாலியில் நடந்தது.

இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய ஆரம்ப வீரர் ஹைடன், ஹர்பஜன் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அப்போது சகீர்கான், ஹைடனுக்கு குறுக்கே சத்தமிட்டு ஓடினார். சகீரின் செயலை ஹைடனும், நடுவரிடம் சுட்டிக் காட்டினார்.

இது குறித்து போட்டி நடுவர் கிறிஸ் பிராட் கூறுகையில்,

சகீர்கானின் செயலை ஏற்றுக் கொள்ள முடியாது. ஹைடனை அவமரியாதை செய்யும் நோக்கில் சகீர் நடந்து கொண்டுள்ளார்.

இது ஐ.சி.சி., விதிகளுக்கு புறம்பானது. இதனால் அவருக்கு போட்டி சம்பளத்தில் 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

அடுத்த 24 மணி நேரத்திற்குள் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய சகீருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**எல்லை மீறினார்**

மொகாலி டெஸ்டில் இந்திய அணி எல்லை மீறியது என்கிறார் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங். இது குறித்து பேட்டி அளித்த பொன்டிங் கூறுகையில்,

பேட்டியின் போது லேசான மோதல்கள், சொற்போர் நிகழ்வதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இந்திய அணி எல்லை மீறிய செயல்களில் ஈடுபட்டது.

அதனால் தான் நடுவர்கள் குறிக்கிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஹைடன் விடயத்தில் சகீர் கானின் செயல் இவ்வகையைச் சார்ந்தது என்றார். (5)

# இந்திய அணித்தலைவராக தோனி நீடிக்க வேண்டும்

## இயன் செப்பல் தெரிவிப்பு

(மொகாலி)

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மொகாலியில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா 320 ஓட்டங்களில் அபார வெற்றி பெற்றது. கும்ப்ளே காயம் காரணமாக ஆடாததால் தோனி அணித்தலைவர் பொறுப்பை வகித்தார்.

அவரது திறமையான அணித்தலைமையின் காரணமாகவே மிகப்பெரிய வெற்றி கிடைத்தது என்று சொல்லலாம். அதற்கு ஏற்றவாறு அவருக்கு ஆட்ட நாயகன் விருது கிடைத்தது.

இந் நிலையில் தோனியே தொடர்ந்து அணித்தலைவராக நீடிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியா முன்னாள் வீரரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான இயன் செப்பல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

மொகாலி டெஸ்ட்டில் பெற்ற வெற்றியை இந்தியா பல வழிகளில் கொண்டாடலாம். டெண்டுல்கர் புதிய உலக சாதனை படைத்தது. கங்குலி 7 ஆயிரம் ஓட்டங்களை தொட்டது, மிகப் பெரிய ஓட்டங்களால் வெற்றி என்று பலவற்றை சொல்லலாம்.

கூட்டு முயற்சியால் வெற்றி கிடைத்தது. சகீர்கான், ஷேவாக், அமித் மிஸ்ரா மற்றும் காம்பீர் ஆகியோரது பங்களிப்பும் இருந்தது. இவை எல்லாவற்றையும் விட தோனியின் தலைமையும், அவரது ஆட்டமும் சிறப்பாக இருந்தது. மற்றவர்களுக்கு உதாரணமாக அவர் திகழ்கிறார்.

எஞ்சிய 2 டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் இல்லை. கும்ப்ளே அணித்தலைவராக இருப்பார் என்று தேர்வு குழு சமீபத்தில் அறிவித்தது. என்னை பொறுத்த வரை தோனியே டெஸ்ட் அணித்தலைவராக நீடிக்க செய்ய வேண்டும்.

அவரால் தான் இந்திய முன்னிலை பெற்றது. டெஸ்ட் அணித்தலைவராக அவர் நியமிக்கப்பட இதுவே சரியான நேரம். கும்ப்ளே இன்னும் உடல் தகுதியுடன் இல்லை. இதனால் தோனி அணித்தலைவராக நீடிப்பதே நல்லது. இவ்வாறு இயன் செப்பல் கூறியுள்ளார்.

தோனி ஏற்கனவே 20 ஓவர் போட்டி, ஒரு நாள் போட்டி ஆகியவற்றில் திறமையான அணித்தலைவராக செயல்படுகிறார்.

மொகாலி டெஸ்டில் அபார வெற்றி கிடைத்ததன் மூலம் டெஸ்டுக்கும், தான் பொருத்தமான அணித்தலைவர் என்பதை நிரூபித்து விட்டார். அடுத்த டெஸ்ட் தொடரில் அவர் அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. (5)

# டெண்டுல்கரின் சாதனையை பொன்டிங்கே முறியடிப்பார்

## லாரா நம்பிக்கை

(மெல்போர்ன்)

எனது சாதனையை முறியடிக்க தகுதியானவர் சச்சின் என மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லாரா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே லாரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சச்சினின் சாதனை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த லாரா தான் 11 ஆயிரத்து 953 ஓட்டங்களைக் கடந்து சாதனை புரிந்தபோதே அது விரைவில் முறியடிக்கப்படும் என நம்பியதாக கூறினார்.

அதற்கு தான் விரைவில் ஓய்வெடுத்ததும் ஒரு காரணம் என தெரிவித்தார்.

சச்சினின் சாதனையை அவுஸ்திரேலிய வீரர் ரிக்கி பொன்டிங் முறியடிப்பார் என தெரிவித்தார்.

ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரத்து 246 ஓட்டங்கள் குவித்துள்ள பொன்டிங் சச்சினின் 12 ஆயிரத்து 37 ஓட்டங்களை கடந்து சாதனை புரிவார் என நம்புவதாக லாரா தெரிவித்தார். (5)

# டெஸ்ட் தரவரிசை; சச்சின் முன்னேற்றம்

(டுபாய்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

இதில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாராவின் சாதனையை முறியடித்து மீண்டும் சாதனை நாயகன் தான் என்பதை உலகுக்கு நிரூபித்த இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 19-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதற்கு முன் இவர் 24-வது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதிரடி ஆட்டக்காரர் சேவாக் 10-வது இடத்திலும் கங்குலி 2 இடங்கள் முன்னேறி 23ஆம் இடத்திலும் மொகலி டெஸ்டின் வெற்றிக்கு உதவிய காம்பீர் 29-வது இடத்திலும் அணித்தலைவர் தோனி 7 இடங்கள் முன்னேறி 37-வது இடத்திலும் உள்ளனர். (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## யாழ்ப்பாணத்தில் இன்று...

தாராளமாக யாழ்.குடாநாட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்தோம்.

அதுவும் கொழும்பு விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் நாம் பாடுபட்டோம். உள்நாட்டிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் நாங்கள் எடுத்த பெருமுயற்சியை மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மழை காலம் ஆரம்பித்து விட்டதால் பொருள்களைக் கொண்டு வரும் பயண மார்க்கத்திலும் ஏற்றி இறக்கும் பணிகளிலும் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என்பதால் நீண்டகாலத் தேவையை மனதில் கொண்டு பெருந்தொகையான பொருள்களை யாழ். குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதில் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டோம்.

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதையை மூடி புலிகள் தடுத்து நின்றபோதும் கடல் மார்க்கமான பயணத்தினையும் தாக்குவோம் எனப் புலிகள் அச்சுறுத்தியிருந்தபோதும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் மக்களுக்கான தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து நாம் மக்களுக்காகச் செயற்பட்டோம்.

நியாயமானதும் சாத்தியமானதுமான எமது இந்த முயற்சிக்கு ஜனாதிபதி உட்பட்ட அரச நிர்வாகத்தினரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர்.

இத்தகைய நெருக்கடி மிகுந்த நேரத்தில் புலிகள் இன்று (22.10.2008) இரண்டு உணவுக் கப்பல்களைத் தாக்கியுள்ளனர். தாக்கப்பட்ட இரு கப்பல்களிலும் அரிசி, சீனி, கட்டடப்பொருள்கள், சீமெந்து ஆகிய பொருள்களே ஏற்றி வரப்பட்டிருந்தன.

அதுவும் அரிசியைக் கொழும்பு விலையில் கிடைக்கச் செய்வதற்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த உணவுக் கப்பல்கள் மீதான தாக்குதலானது எவ்வகையிலும் இராணுவம் நோக்கம் கொண்டதல்ல.

இது முழுக்க முழுக்க யாழ்.குடாநாட்டு மக்களின் உணவு, அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அபிவிருத்தியை இலக்கு வைத்த தாக்குதலாகும். மக்களைப் பட்டினி போடுவதன் ஊடாகவும் அபிவிருத்தியைத் தடுப்பதன் ஊடாகவும் புலிகள் தமது பிரசாரத்திற்கு வலுச்சேர்க்கவே முயற்சிக்கின்றனர்.

வன்னிக்குள் யுத்தம் வீச்சடைந்து வருகையில் அங்கிருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேற விடாமல் அவர்களை ஆயுதமுனையில் தடுத்து நிற்கும் புலிகள் அவர்களின் அவலங்களைக் காட்டி ஆதாயம் தேடவும் முயற்சிக்கின்றனர்.

இன்று உணவுக் கப்பல்களைத் தாக்கிய புலிகள் கடந்த இரண்டு வாரத்திற்கு முன்னர் வன்னியில் அவலப்படும் மக்களுக்கான உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரணியைத் தாக்கும் நோக்கில் ஷெல் தாக்குதல்களை நடத்தியிருந்தனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

புலிகளின் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கையை எதிர்ப்போம். எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்ட உரத்துக் குரல் கொடுப்போம்.

எமது கண்டனத்தை வெளிப்படுத்த வன்முறையைக் கையில் எடுக்காமல், ஹர்த்தால் ஒன்றை அனுஷ்டிப்பதன் மூலம் வெளிப்படுத்துவோம்.

இன்று (23.10.2008) யாழ்.குடாநாட்டில் சகல பகுதிகளிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்போம். கடைகள், வேலைத்தளங்கள், திணைக்களங்கள், பாடசாலைகள் என அனைத்தையும் மூடி மக்கள் விரோதச் செயலுக்கு எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை வெளிக் காட்டுவோம் என்றுள்ளது. (எ)

## பிரதமர்...

புலிகளை அழிக்க இந்தியா திட்டமிட்டு இராணுவ உதவி செய்துள்ளது. இலங்கையின் இனப்படுகொலைக்கு இந்திய இராணுவம் உதவுகிறது. தமிழன் சிந்திய ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும் ஒவ்வொரு தமிழனின் சாவுக்கும் மத்திய அரசும் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் பொறுப்பு.

மத்திய அரசு செய்த துரோகத்தை எப்படி மன்னிக்க முடியும். இலங்கையில் எப்போதே தமிழீழம் மலர்ந்திருக்கும். அதைத் தடுத்தது இந்தியாதான்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தமிழர்களுக்கு எதிராக ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. இலங்கையில் ஒருமைப்பாட்டைக் காக்க இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைத்துவிடாதீர்கள்.

இந்தியா புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். போரை நிறுத்துங்கள். உலகின் அனைத்து நாடுகளும் புலிகளுக்குத் தடை போட இந்திய அரசுதான் காரணம் என்றார். (ச-5)

## காங்கேசன்துறை கடலில் நின்ற...

கப்பல்கள் மீதான தாக்குதல் குறித்துப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளதாவது,

யாழ்ப்பாணப் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் சென்ற றுகுணு மற்றும் நிமலவ ஆகிய இரு வர்த்தகக் கப்பல்களை இலக்கு வைத்துப் புலிகள் நேற்றுக் காலை 5.10 மணியளவில் தாக்க முற்பட்ட போது அவர்களின் தற்கொலைப் படகுகளைக் கடற்படையினர் தாக்கியழித்துள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்தார்.

மேலும் இவ்விரு கப்பல்களும் யாழ். பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வடக்குக் கடற்பரப்பை அண்மித்து வரும்போது புலிகள் மூன்று படகுகளில் வந்து அக் கப்பல்களைத் தாக்க முற்பட்டனர்.

கப்பல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படைப் பிரிவினர் உடனடியாகச் செயற்பட்டு இரு படகுகளை இவ்விடத்திலேயே தாக்கியழித்துள்ளதுடன் மற்றுமொரு படகைக் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையினரின் தாக்குதலில் புலிகளின் தற்கொலைப் படகு ஒன்று வெடித்துச் சிதறியபோது நிமலவ கப்பலுக்குச் சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள படையினருக்கு விநியோகங்களை மேற்கொண்டு வந்த பிரதான கப்பல்களில் ஒன்றான எம்.வி.நிமலவ கடற்புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து விடுதலைப்புலிகள் தெரிவிக்கையில், காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற படையினரின் பிரதான வழங்கல் கப்பல்களான எம்.வி.நிமலவ மற்றும் எம்.வி.றுகுணு ஆகியவற்றின் மீது நேற்று அதிகாலை 5.10 மணியளவில் கடற்புலிகளின் சிறப்பு அணிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு கப்பல் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டது. தாக்குதலுக்குள்ளான மற்றைய கப்பலான எம்.வி.றுகுணு பலத்த சேதங்களுடன் கடற்படையினரால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்தக் கப்பல்கள் படையினருக்கான தமது வழமையான வழங்கல் பணியை முடித்த பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற வேளை கடற்புலிகளின் மகளிர் துணைத்தளபதி கடற்கரும்புலி லெப்.கேணல் இலக்கியா தலைமையில் சென்ற அணி மின்னல் வேகத் தாக்குதலை நடத்தியது.

இத் தாக்குதலில் எம்.வி.நிமலவ கப்பல் தீப்பற்றி எரிந்தவாறே மூழ்கத் தொடங்கியது. எம்.வி.றுகுணு கப்பல் கடும் சேதங்களுக்கு உள்ளானது. தரையிலிருந்து விரைந்து வந்த கடற்படையினர் அதை மூழ்க விடாது தரைக்கு இழுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இச் சம்பவத்தில் கடற்புலிகளின் மகளிர் துணைத் தளபதி கடற்கரும்புலி லெப்.கேணல் இலக்கியாவுடன் கடற்புலிகளின் கொமாண்டோ லெப்.கேணல் குபேரன் வீரச்சாவடைந்தார்.

தாக்குதலையடுத்துத் துறைமுகப் பகுதியிலிருந்து கடற்படையினர் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## வாடகைக்கு

யாழ்.போதனா வைத்தியசாலை, வேம்படி மகளிர் கல்லூரி சுற்றாடலில் உள்ள சகல வசதிகளையுமுடைய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தாதிய மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 021 222 5032, 077 4372044

(c-1708)

# அமைச்சர் சந்திரசேகரனை நீக்க சிங்களக் கட்சிகள் வலியுறுத்தல்

இந்திய வம்சாவளித் தமிழர்களின் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய சிங்களக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டை வரவேற்றதாகவும் புலிகளுக்கு ஆதரவாக சந்திரசேகரன் பேசினார் என்றும் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் முறையிட்டனர்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியத் தலையீட்டை அமைச்சர் சந்திரசேகரன் ஆதரித்து கருத்து வெளியிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் ஆதரவாளர் சந்திரசேகரன் என ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவேசமாக முழக்கம் எழுப்பினர். முன்னதாக நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்குக் கூடியதும், சந்திரசேகரன் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்தார். போரைக் கண்டித்தும் தமிழகப் போராட்டங்களை ஆதரித்தும் அந்த அறிக்கையில் சந்திரசேகரன் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அந்த அறிக்கை தொடர்பாக அமைச்சர்களைப் பார்த்து ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

அதனையடுத்து ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் அமைச்சர் சந்திரசேகரனின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் அமைச்சர் சந்திரசேகரன் தனது அறிக்கையை எதிர்ப்புக்கு மத்தியில் வாசித்து முடித்தார்.

இதனால் விமல் வீரவன்சவுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அமைச்சர் சந்திரசேகரன் தனிப்பட்ட கருத்தையே அறிக்கையாக வெளியிட்டார் என்று அரசாங்கத்தின் பிரதம அமைப்பாளர், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன விளக்கமளித்தார். (ச-5)

## பேச்சுவார்த்தை மூலமான...

மனிதாபிமான நிலைமைகள் கவலையளிக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

அப்பகுதியில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த நிலையிலுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்தும் அவ்வாறானவர்களின் நிலை குறித்தும் இந்தியா கவலையடைந்துள்ளது.

பொதுமக்களின் நலன்களும் பாதுகாப்பும் எப்படிப்பட்ட நிலையிலும் உறுதி செய்யப்பட வேண்டும் என நாங்கள் இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளோம்.

அதுமட்டுமல்ல, உணவும் இதர அத்தியாவசிய பொருள்களும் தங்குதடையின்றி அவர்களைச் சென்றடைய வேண்டும் என்றும் கூறியுள்ளோம். இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் நலன்களும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்று இந்தியாவுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவாதிக்க இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ விரைவில் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண முடியாது என்பதை இந்தியா மீண்டும் வலியுறுத்துகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடக்கும் போரில் இலங்கையிலுள்ள தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளும் நலன்களும் சிக்குண்டு போகக் கூடாது.

மேலும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக வழிமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க இலங்கை அரசை இந்தியா ஊக்குவிக்கின்றது.

இவை மட்டுமல்ல, இந்திய மீனவர்களின் நலன் தொடர்பாகவும் இலங்கை அரசுடன் பேசி வருவதாகவும் தெரிவித்துள்ளார். சர்வதேச கடல் எல்லைகளைக் கடக்கும் இந்திய மீனவர்கள் மீது இலங்கையின் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்துவதைத் தவிர்க்குமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் சர்வதேச எல்லையை இந்திய மீனவர்கள் கடக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றில் நேற்று அவர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

## எறிகணை...

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத்தற்கொலைத் தாக்குதலையடுத்து காங்கேசன்துறை மற்றும் மயிலிட்டி இறங்குதுறை முகங்களுக்குப் பொருள்கள் இறக்குபவர்களுக்கும் லொறிகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தன.

மேலும் இத் தாக்குதலில் சீமெந்தினை ஏற்றி வந்த கப்பல் ஒன்று சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தற்போது யாழ்.குடாநாட்டில் சீமெந்துப் பைகள் வர்த்தக நிலையங்களில் பதுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்ட செயலகத்தால் அரச நிர்ணய விலையில் வழங்கப்பட்டு வந்த சீமெந்து விநியோகமும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பரவலாகப் பேசப்பட்டது. (ச)

## பசில்...

ராஜபக்ஷ இந்தியாவிலுள்ள இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மற்றும் பிரதி உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத் துறைச் செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோரை பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் சந்திக்கவுள்ளனர். (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானாம்பிகை நடராஜா

மூளாய் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை நடராஜா 22.10.2008 நேற்றுக் காலமானார். இவர் நடராஜாவின் (தலைவர்-விவசாய சம்மேளனம், மூளாய், பொன்னாலை) அன்பு மனைவியும், அமரர்களான கந்தசாமி நல்லம்மாவின் மகளும், திருமதி பங்கயற்செல்வி யோகநாதன் (ஆசிரியை - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), பைந்தமிழ்ச்செல்வன், செந்தமிழ்ச் செல்வன் (கிருஷ்ணா வெதுப்பகம், மூளாய்), கலைச்செல்வி (கூட்டுறவு வைத்திய சாலை, மூளாய்), முத்தமிழ்ச்செல்வன் (மலேசியா), அருள்மொழிச்செல்வன் (மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

அமரர் சேனாதிராஜா மற்றும் ஐயாத்துரை, அமரர் கணேசமூர்த்தி மற்றும் காங்கேசு, இராமநாதன் (C.T.B. காரைநகர்), பாலச்சந்திரன் (சித்திவிநாயகர் வர்த்தக நிலையம், மூளாய்), அமரர் தேவகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வி. யோகநாதனின் அன்பு மாமியும், யக்சயன், ஆதீசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2008) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்

(c-1709)

தகவல்
குடும்பத்தினர்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.